

24

# கன்பூசியஸின்
# நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

## உலகளாவிய பொதுக் கள உரிமம் ( CC0 1.0 )

இது சட்ட ஏற்புடைய உரிமத்தின் சுருக்கம் மட்டுமே. முழு உரையை https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode என்ற முகவரியில் காணலாம்.

**பதிப்புரிமை அற்றது**

இந்த ஆக்கத்துடன் தொடர்புடையவர்கள், உலகளாவிய பொதுப் பயன்பாட்டுக்கு என பதிப்புரிமைச் சட்டத்துக்கு உட்பட்டு, தங்கள் அனைத்துப் பதிப்புரிமைகளையும் விடுவித்துள்ளனர்.

நீங்கள் இவ்வாக்கத்தைப் படியெடுக்கலாம்; மேம்படுத்தலாம்; பகிரலாம்; வேறு கலை வடிவமாக மாற்றலாம்; வணிகப் பயன்களும் அடையலாம். இவற்றுக்கு நீங்கள் ஒப்புதல் ஏதும் கோரத் தேவையில்லை.

❋❋❋

இது, உலகத் தமிழ் விக்கியூடகச் சமூகமும் ( https://ta.wikisource.org ), தமிழ் இணையக் கல்விக் கழகமும் ( http://tamilvu.org ) இணைந்த கூட்டுமுயற்சியில், பதிவேற்றிய நூல்களில் ஒன்று. இக்கூட்டுமுயற்சியைப் பற்றி, https://ta.wikisource.org/s/4kx என்ற முகவரியில் விரிவாகக் காணலாம்.

## Universal (CC0 1.0) Public Domain Dedication

This is a human-readable summary of the legal code found at https://creativecommons.org/publicdomain/zero/1.0/legalcode

**No Copyright**

The person who associated a work with this deed has **dedicated** the work to the public domain by waiving all of his or her rights to the work worldwide under copyright law, including all related and neighboring rights, to the extent allowed by law.

You can copy, modify, distribute and perform the work, even for commercial purposes, all without asking permission.

❋❋❋

This book is uploaded as part of the collaboration between Global Tamil Wikimedia Community ( https://ta.wikisource.org ) and Tamil Virtual Academy ( http://tamilvu.org ). More details about this collaboration can be found at https://ta.wikisource.org/s/4kx.

# கன்பூசியஸின்
# நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

புலவர் என்.வி. கலைமணி எம்.ஏ.,

**சாந்தி நிலையம்**
புதிய எண். 126, உஸ்மான் சாலை,
தி.நகர், சென்னை-600017.

விலை : ரூ. 20-00

□ KANPOOSIYASIN NAMMAI MEAMPADUTHTHUM ENNANGAL □ By : N. V. Kalaimani □ First Edition : December 2000 □ Price Rs. 20-00 □ Copy Right Holder : Bhaarathe Pathippaham, Chennai-17. □ Published by: SHANTHI NILAYAM New No. 126, Usman Road, T. Nagar, Chennai-600017. Phone: 4340205 P.P. □ Printed at: Kumar Printers, Chennai-600033. □

# பதிப்புரை

சீன சிந்தனையாளர் கன்பூசியஸ் பற்றி அறியாதவர்கள் யாரும் இருக்க முடியாது, அவரைப்பற்றி ஏராளமான நூல்கள் பிற மொழிகளில் வெளிவந்திருந்தாலும் தமிழில் அநேகமாக ஒன்றோ இரண்டோ தான் வெளி வந்திருக்கின்றன. எனவே இதனை மனதில் கொண்டு மக்களுக்கு பயன்படும் வகையில் அவரைப் பற்றிய அரிய தகவல்களுடன் அவரது சிந்தனைகளையும் இந்நூலில் தொகுத்து வழங்கியுள்ளோம்.

இந்நூலை சிறப்புற தொகுத்துத் தந்த புலவர் N. V. கலைமணி அவர்களுக்கும், மற்றும் இந்நூல் நன்கு வெளிவர உதவிய அனைவருக்கும் எங்களது நன்றி.

- பதிப்பகத்தார்

எமது பற

## நன்மை மேம்படுத்தும் எண்ணங்கள் நூல்கள்

டாக்டர் மு.வ.வின் நன்மை மேம்படுத்தும் எண்ணங்கள்
பகவான் ஸ்ரீராமகிருஷ்ணரின் ,,
அண்ணல் மகாத்மா காந்தியின் ,,
காமராஜரின் ,,
வி. ராதாகிருஷ்ணனின் ,,
சர் வின்ஸ்டன் சர்ச்சிலின் ,,
ஸ்டாலினின் ,,
டார்வினின் ,,
அறிஞர் அண்ணாவின் ,,
அன்னி பெசண்ட் அம்மையாரின் ,,
கவிஞர் கண்ணதாசனின் ,,
குன்றக்குடி அடிகளாரின் ,,
பெஞ்சமின் ஃப்ராங்கிளினின் ,,
அன்னை தெரேசாவின் ,,
நம்நாட்டுத் தலைவர்களின் ,,
நாட்டுக்கு உழைத்த நல்லவர்களின் ,,
இங்கர்சாலின் ,,
அரிஸ்டாட்டிலின் ,,
பிளாட்டோவின் ,,
ரூசோவின் ,,
சாக்ரடீசின் ,,
ஜே. கிருஷ்ணமூர்த்தியின் ,,
ரஸ்ஸலின் ,,
நீட்சேயின் ,,
தந்தை பெரியாரின் ,,
பாரதியின் ,,
கவிக்குயில் சரோஜினியின் ,,
கலீலியோவின் ,,

# கன்பூசியஸின்
# நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள்

## 1. காற்றும், புல்லும்!

அய்யன் திருவள்ளுவர் பெருமானுக்குப் பிறகு, சீன நாட்டில் அவரது அறநெறி வழிகள் சார்பாக, உலக சமுதாயத்தில் தனி மனிதனாகவும், பொது மனிதனாகவும், தோன்றிய துறைகளிலே எல்லாம் புகழொடு தோன்றி, மனிதகுலம் வாழ்வது எப்படி என்று சிந்தித்து வழிகாட்டி மறைந்த ஒரு மாபெரும் ஞானி கன்பூசியஸ் என்ற ஞானியர் திலகம்!

திருவள்ளுவர் பெருமானுக்குப் பிறகு அந்த ஞானப் பெருமகன் பிறந்தார் என்று நாம் எழுதுகின்ற போது, இதன் ஆராய்ச்சியைக் கூறுவதானால், நூல் பெருகும் திறனாய்வாகத் திகழும் என்பதால், நாம் ஆய்வு உலகத்துக்குள் புக விரும்பவில்லை. அதற்கு ஒரு தனி நூலே எழுத வேண்டிய நிலை தோன்றும்.

ஆனாலும், கன்பூசியஸ் என்ற சீன நாட்டு ஞானி, திருவள்ளுவர் பெருமானைப் போலவே ஓர் அறநெறியாளராக வாழ்ந்தார்.

அவர் அறநெறி ஆசானாக மட்டுமே வாழ்ந்து காட்டியவர் அல்லர்; சிறப்பான ஓர் அரசை அமைத்து காட்டுவதற்குரிய ராஜ தந்திரியாகவும் நடமாடினார். அதற்கான அனுபவமும் உள்ளவராகப் பணியாற்றிக் காட்டிய முனி

ஜோதியாகவும் திகழ்ந்தார் பேரறிஞர் பிளேட்டோ என்ற அரசியல் மகானைப் போல!

கன்பூசியஸ் எங்கு போனாலும், எங்கு வாழ்ந்தாலும், எப்போதும் தன்னுடனே ஒரு மாணவர் குழுவை உடன் வைத்துக் கொண்டிருந்த ஒரு குருகுல ஆசானாவார்! போதிமாதவன் புத்தர் பெருமானைப் போல!

சீன ஞானப் பெருமகன் கன்பூசியஸ், கிறிஸ்து பெரு மகனான இயேசு பெருமான் பிறப்பதற்கு 550 ஆண்டுகளுக்கு முன்னரே, சீன நாட்டில் பாராமுகமாகப் பராமரிக்கப்பட்டு வந்த பெரு நூல்களைத் தொகுத்து நூற்களாக வெளியிட்ட ஒரு பதிப்பாசிரியராகவும் விளங்கி னார்.

கன் பூசியசைப் போல தனது நாட்டுச் சான்றோர்களின் இலக்கிய, வரலாற்று, கவிதை நூற்களை எல்லாம் தனது தாய்நாட்டு எதிர்காலத்திற்கான நூற் புதையலைச் சேமித்து, நூற்களாக வெளியிட்ட சிந்தனையாளர்கள், பதிப்பாளர்கள் வேறு எந்த நாட்டிலும் தோன்றியதாக, நமக்குத் தெரிந்தவரை வேறு எவரும் இல்லை என்று மலை மேல் நின்று குரல் ஒலிக்கலாம்; அத்தகைய ஓர் அறிவுச் சேவையை ஏற்று அரும்பாடுபட்ட ஞானமேதை அவர்!

கன்பூசியஸ், தனது வாழ்நாள் வரையிலும், தன்னுடன் இருந்த மாணவமணிகளுக்கு அவ்வப்போது சந்தேகம் ஏற் படும் போதெல்லாம், அவர்கள் தொடுத்த கேள்விகளுக்கு தக்க விடைகளை விளக்கி அவர்களின் அறியாமைகளை அகற்றிவந்த ஒரு நடமாடும் பல்கலைக்கழகமாக வாழ்ந்து வந்த கல்வி போதகராக இருந்தவராவார்.

கன்பூசியஸ் என்ற மாமேதை நமது நாட்டுக் கம்பர் பெருமானைப் போல கவியுலகச் சக்கரவர்த்தியாக நட மாடிய மாபெரும் கவிமகான்! கவிதைகளைப் பாடியது

மட்டுமல்ல அவர் தொழில்; இயற்றிய பாடல்களை உளம் உருகப் பாடிக்காட்டி மக்களை, மாணவர்களைப் பரவசப் படுத்தி மகிழ்வூட்டிய ஓர் இசைப்பாடகர்; ஒரு சங்கீத விற்பன்னர். நமது நாட்டுச் சங்க காலப் பாணர்களைப் போல!

கன்பூசியஸ் என்ற பேரறிவாளன் ஓர் அரசியல் வாதி! அமைச்சராக அரும்பணி ஆற்றியவர்-சேக்கிழார் பெரு மானைப் போல! நாட்டின் காவலராக வாழ்ந்தவர்! அவருடைய அரிய ஆட்சிப் புலமையை ஏற்றுக் கொள்ளும் அரசியல் அறிஞர்கள் அப்போது இல்லாததால், சீன ஆட்சி கள் ஒரே குழப்பக் குட்டைகளாகக் காட்சித்தந்தன!

கன்பூசியஸ் அந்தந்த நேரத்தில் எந்த காரியத்தையும் அலட்சியம் செய்யாமல்; ‘செய்யும் தொழிலே தெய்வம்’ என்பதாக மதித்துப் பணியாற்றிய ஒரு காரியவாதி! ஒரு சமயம் ஆடுமாடுகளைக் கூட மேய்த்துக் கூலி பெற்றார்! மறுமுறையோர் நேரத்தில் கால்நடைக் கண்காணிப்புக் கணக்கராகவும் காரியமாற்றினார்! அதே மனிதர்தான், அமைச்சனாகவும், ஞானாசிரியனாகவும், மாணவப் போதகராகவும் அலுவலாற்றினார். எதைச் செய்யத் துணிந்தாலும் காரியவாதியாகவே செயல் புரிந்தார்!

தத்துவ ஞானம் கற்றுத் தரித்திரராக ஊர் சுற்றிச் சுற்றி வறுமையோடும் போராடிடும் நாடோடியாகவும் திரிந்தவர் கன்பூசியஸ்!

மேற்கண்ட அத்தனைச் சிறப்புகளும், மேன்மைகளும் ஒன்றாக இணைந்த ஒரு மனித உருவமாக, ஞான ஆத்மா வாக, புதிய எண்ணங்கள் என்ற பூக்கள் மலரும் செடி கொடிகளாக, புதிய லட்சியக் கனிகள் பழுக்கும் மூக்கனி மரங்களாக மக்கள் இடையே நடமாடிய ஓர் அற்புத ஞானாவதாரமாக, வானகம் தந்த இயற்கைக் கொடை யாக நடமாடியவர் கன்பூசியஸ் என்றால் மிகையாகா!

இவ்வளவு அரிய திறன்களை எல்லாம் தனது அறிவு எனும் தோளிலே சுமந்த கன்பூசியசின் லட்சியம் தான் என்ன? என்று கேட்கிறீர்களா?

வேறொன்றும் இல்லை. நமது சங்ககாலக் கவிஞரான பூங்குன்றனார் கண்ட கனவான, "யாதும் ஊரே; யாவரும் கேளிர்" என்ற தத்துவத்தை நனவாக்கிட, 'ஒரே உலகம், ஒரே மனித சமுதாயம்'; ஒரே பொது ஒழுக்கம் என்ற பெயர் சூட்டி அதற்காக அயராமல் உழைத்தவர்தான் கன்பூசியஸ்!

உலகம் முழுவதற்கும் ஒரே ஒழுங்கு; ஒரே பொது நெறி; என்ற உலகப் பொதுநல சமுதாயம் அமைக்கவும், அந்த சமுதாயத்தில் தன்னலமற்ற தனி மனிதன் பொது மகனாக வாழவும், அன்புவழியில் அனைவரிடமும் சமத்துவ சகோதரத்துவப் பாசத்தோடு, அற நெறிகளைப் பின்பற்றிப் பழகவும், மனிதத்தன்மையைப் பண்படுத்தி வளர்ந்து' இயற்கையோடு இணைந்து, முழு மனிதனாக வாழ்வதும் தான் அந்த உலக சமுதாயத்தின் இலட்சியம் என்பதைச் சீன மக்களுக்கு எடுத்துக்காட்டியவர் கன்பூசியஸ்.

★ அன்பு வழிதான் எனது மதம்!

★ அதன் அறநெறிகள்தான் எனது வேதம்!

★ மனித தத்துவம்தான் அதன் ஆத்துமம்!

★ அதற்குரிய சமுதாயப் பண்பாடுதான் அதன் திருக்கோயில்!

★ அந்தப் பண்பாடுகளுக்குரிய வழிபாடுதான் பூசை விதி!

★ அப்பூசைக்குரிய பக்திஉள்ளம்தான் பிரார்த்தனை!

★ இவற்றால் பெறுகின்ற பேரின்பம் தான் முக்தி நிலை.

இந்த தத்துவ நெறிகளைச் சுமார் 2500 ஆண்டு களுக்கு முன்பாக, கன்பூசியஸ் என்ற ஞானி பழமைப் பண்பு களுக்குப் புதுமை நெறிகளை வகுத்து ஒரு கொள்கையை உருவாக்கி அமைத்துக் காட்டிய ஒரே சமுதாயம் ஒரே உலகம், ஒரே பொது நெறி ஒழுக்கம் தான் இன்றும் மக்கள் கூறிக் கொண்டிருக்கும் கன்பூசியனிசம் என்ற ஒரு தத்துவ மாகும்.

இந்த இலட்சியத்தை விளக்கிக் கன்பூசியஸ் மக்களி டையே பேசும்போது, அதற்குரிய உருவ நெறிகளையும் சுட்டிக் காட்டினார். அவற்றுள் சில:

"நீங்கள் எதை விரும்ப மறுக்கிறீர்களோ, அதைப் பிறருக்குச் செய்ய நினைக்காதீர்கள்! என்றார்!.

அறிவை நான்கு வகைகளாகப் பகுத்தார்! இயற்கை யிலேயே நல்லறிவு உள்ளவர்கள் மக்களில் முதல் வகை; கற்றக் கல்வியின் மூலம் அறிவு பெற்றவர்கள் இரண்டாம் வகை; உழைப்பினால் கல்வியைச் சேகரித்துக் கொண்டவர் மூன்றாம் தரத்தினர்; கல்வியில் மந்தமாக இருந்து கற்க முடியாதவர்கள் நான்காம் பிரிவினர் என்றார்.

நியாயத் தீர்ப்பு பெறும் சம்பவங்களில் நான் பிறரைப் போலவே இருக்கிறேன். ஆனால், நியாயத் தீர்ப்பு அளிக் காமல் இருக்கும் சம்பவங்களையே நான் பெரிதும் விரும்பு கிறேன். ஏன் தெரியுமா?

தவறு செய்தவர்கள் தங்கள் தவறை மறக்க உதவும் வழிகளை மேற்கொள்ளவே மாட்டார்கள். இவர்கள் நீதிக்குரிய மரியாதையை வழங்கவும் முற்படுவார்கள்; இது தான் நாம் அறிவு பெறும் முயற்சி என்றார்!

அவ்வாறானால், அறிவாளர்கள் என்பவர்கள் யார் என்பதை அவர் அடையாளம் காட்டும்போது, அறிவாளி கள் தனக்கு வருகின்ற இடையூறுகளைப் புறம் காண்பதி

லேயேதான் கவனமாக நிற்பான்; வெற்றி பெறுவது என்பது அவர்களுக்கு இரண்டாவது யோசனையே.

தெரிந்தது இது என்பதை அறிவதும்-தெரியாதது இன்னது என்பதை அறிவதும் தான்; அறிவாளியின் சிறந்த இயல்பாகும் என்று சான்றுரைக்கின்றார்!

'அன்பு என்பது உதவி செய்வதுதான்; அனைவரிடத்தும் எல்லோரும் அன்பு காட்ட வேண்டும். இதனால் நல்லவர்களின் நட்பை நாடுங்கள்.

அழகு எனும் பொருளின் திட்டங்களுக்கு அடங்காதனவற்றை அறவே கவனிக்காதீர்கள். அழகிற்கு அப்பாற்பட்ட செயல்கள் எதையும் செய்யாதீர்கள்.

அமைதி என்றால் என்ன என்பது பற்றி அவர் அறிவிக்கும் போது; 'தன் வீட்டில் உள்ள குடும்பத்தினர்களுடன் அன்புடன் வாழ்பவன்தான் அமைதியைப் பற்றிப் பேசிட அருகதை உடையவனாவான். பல விஷயங்களைப் பற்றி நன்றாக ஆராயும்போதுதான் அறிவு பிறக்கிறது. அந்த அறிவும் அதனால் முழுமை அடைகிறது. அந்த அறிவு நிறைவு பெறுவதால் சிந்தனையும், எண்ணங்களும் தூய்மை பெறுகின்றன. எண்ணங்களும், சிந்தனைகளும் பரிசுத்தம் பெறுவதால் இதயம் தூய்மை அடைகின்றது. அந்த இதயத் தூய்மை, மனிதனின் மனதைப் பண்படுத்துகிறது. பக்குவம் அடைகிறது. இதுபோன்ற மனப்பக்குவம் பெற்றவர்கள் வாழும் குடும்பங்களில் மகிழ்ச்சி நிறைந்திருக்கின்றது. இத்தகைய குடும்பங்கள் உள்ள நாடு அமைதியில் நிலைபெற்று விடும். இது போன்ற நாட்டில் உள்ள மக்களனைவரும் தங்களது உற்றார், உறவினர், நண்பர்களிடத்தில் அன்பு செலுத்தும்போது, அவர்கள் தங்களை விட மேல் நிலையில் வாழ்பவர்களை மதித்துவந்தால் வானகத்தான் குடைகீழ் எங்கும் அமைதி நிலவும் என்று அவர் குறிப்பிடுகிறார்.

நாட்டை ஆளும் மன்னன் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும் என்றால், 'அவன் தன் நல்ல ஒழுக்கத்தால் ஆட்சி செலுத்தும்போது துருவ நட்சத்திரம் போல் விளங்குகிறான். அந்த விண்மீன் சலனமற்று, நடுநிலையிலிருக்க, மற்ற நட்சத்திரங்கள் எல்லாம் அதனைச் சுற்றிச் சுற்றி வருகின்றன.

மன்னனாக இருப்பது கஷ்டம்தான்; ஆனால் அமைச்சனாக இருப்பதும் கஷ்டந்தான்! ஏன் இந்தக் கஷ்டம் உருவாகின்றது என்றால், அரசன்-தானே, நீதி ஒழுக்கத்தைப் பின்பற்றுபவனாக இருக்க வேண்டும். அப்போதுதான் அவன் கீழ் வாழும் மக்களும் அவன் ஏவுதல் ஏதும் இல்லாமலேயே அவனுடைய கட்டளைக்கு அடங்கி நடப்பார்கள்!

அந்த அரசன் நீதி ஒழுக்கம் தவறி நடக்கும் போது, அவன் எவ்வளவுதான் மக்களைச் சட்டத்தின் மூலம் வற்புறுத்தினாலும்கூட, அந்தச் சட்டங்கள் அவமானப்படத்தானே செய்யும்? இந்த அரசன் நிலை, இன்றைய மக்களாட்சிக்கும் பொருந்தும் அல்லவா? அதனால்தான் மன்னனாக இருப்பதும் கஷ்டம்; அவனுக்கு அமைச்சனாக இருப்பதும் கஷ்டமாகும்—இல்லையா?

அப்படியானால் அந்த அரசன் நடத்துகின்ற ஆட்சி எப்படி இருக்க வேண்டும் என்பதை விளக்குகின்ற ஞானி கன்பூசியஸ், கீழ்கண்ட விளக்கத்தைக் கூறுகிறார். அதாவது, "நேர்மையானவர்களை அரசன் மேனிலைக்குக் கொண்டுவர வேண்டும். மனக்குற்றம் உள்ளவர்களை ஆட்சியை விட்டு அல்லது அவர்களது பதவியை விட்டு அகற்றிவிட வேண்டும். இப்படி ஓர் அரசன் நடவடிக்கை எடுப்பானானால், மக்கள் அந்த ஆட்சிக்கு அன்புடன் பணிந்து நடப்பார்கள். அதே போல அடுத்துள்ளவர்களை மகிழ்விப்பார்கள். தூரத்தில் உள்ளவர்களை ஈர்த்துக்

கவர்வதும், வசீகரிப்பதும் நல்ல ஆட்சி நீடிப்பதற்குரிய சிறந்த இலக்கணமாகும்; என்கிறார்.

மக்களின் நேர்மையான ஒழுக்க வளர்ச்சிகளுக்கு அரசு எந்தக் காலத்திலும் அலட்சியமாக, அக்கறையற்ற விதமாக இருக்கக் கூடாது.

ஒருவேளை அந்த மன்னன் அலட்சியமாகவும், அக்கறையற்றும் இருந்துவிட்டு, சட்டங்கள் மூலமாகவும், தண்டனைகளைத் தருவதன் வாயிலாகவும் மக்களை அடக்க முயன்றால்; அவர்கள் அவற்றை மீறுவதில்தான் அதிக அக்கறை காட்டுவார்கள்! தண்டனைகளையும் அலட்சியம் செய்வார்கள்!

மக்கள்-மன சாட்சியின் கட்டளைக்குகூட கீழ் பணிய மாட்டார்கள். இவை எல்லாம் நடக்கக் கூடாது என்று ஓர் ஆட்சி நினைக்குமானால், அரசுப் பொறுப்பிலே உள்ளவர்கள் தங்கள் ஆளுகையின் மூலமாகவும், ஒழுங்கு, ஒழுக்கம் முறைகளின்படியும் மக்களை வரம்புக்குள் கட்டுப்படுத்தி, நீதியின் வழியே நல்வழிப்படுத்தினால் ஓர் ஆட்சிக்குட்பட்ட மக்கள் தங்களது மனச்சாட்சிக்கு அடங்கியும், பயந்தும், மதிப்புடனும், மரியாதையுடனும், வாழ்வார்கள் என்பதுதான் உண்மை.

அதுசரி, ஓர் ஆட்சியை நிர்வகிக்கும் சட்டம், அதிகாரம் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் நீதி போதகர் கன்பூசியஸ் விளக்குவதைப் பாருங்கள்.

ஓர் ஆட்சியின் சட்டம், ஆணை, கட்டளை, உத்தரவு மக்களுக்கு உகந்தவாறில்லாமல், தவறானதாக அமைந்தால், மகன் தந்தையையும், அமைச்சன் மன்னனையும் எவ்வளவு முனையும் அஞ்சாமல், தயங்காமல் எதிர்த்துப் போராடலாம் என்று அவரே கூறுகிறார்!

'கல்விக் கோட்டங்களிலே மக்களுக்குக் கல்வியைப் போதிக்கும் ஓர் ஆசான் எவ்வாறு இருக்கவேண்டும் என்

பதை அவர் பேசும் போது, "ஆசிரியன் ஒருவன் தான் படித்ததை மறவாமல் இருக்க வேண்டும். அது மட்டுமல்ல; தனது அறிவை மென்மேலும் வளர்த்துக் கொள்ள மேலும் சகல விஷயங்களையும் கல்வி மூலமாகவும், அனுபவம் சார்பாகவும் கற்றுக் கொண்டே வரவேண்டும். இதுதான் ஓர் ஆசிரியனுக்குரிய அடிப்படை இலக்கணம். அதை விடுத்து, மற்றவர்கள் கேட்கும் கேள்விகளுக்குப் பதில் கூற மட்டும்' தெரிந்து கொண்டிருந்தால் போதாது, பல விஷயங்களையும் கற்றுத் தனது நினைவில் வைத்துக் கொண்டிருப்பவன் ஆசிரியன் என்ற பொருளுக்கே உரியவன் அல்லன் என்கிறார்.

கல்வி என்றால் என்ன? அது எவ்வாறு இருக்க வேண்டும் என்பது பற்றி அவர் கருத்தறிவித்தபோது:" இலக்கியக் கல்வியில் நான் பிறரைப் போல சிறந்து விளங்குகிறேன். ஆனால், நான் கற்றக் கல்விக்கு ஏற்றவாறு வாழ்ந்து, சான்றோன் ஆவதில் வெற்றி அடைந்திருக்கிறேனா என்பதில் நான் கேள்விக்குறியாகவே இருக்கிறேன்." என்று தன்நிலையைச் சுட்டிக் காட்டியே மற்றவர்களுக்கும் அவர் அறிவுறுத்தியுள்ளார்!

கல்வி எந்த நாட்டிலும் செய்யுளாகவே துவங்குகின்றது. அதுதக்கநல்லொழுக்கத்தினால் வலுப்பெறுகிறது; வளமாகிறது; அதற்கு நாம் தரும் உரத்தால் ஊட்டமடைகின்றது; வளர்ச்சியடைகின்றது.

எதையும் சிந்திக்காமல் படிக்கும்போது மனதில் குழப்பம் தோன்றுகிறது; அதே நேரத்தில் படிக்காமல் சிந்திப்பது சமநிலையைக் கெடுத்து விடுகின்றது

கற்ற கல்வியை நினைவாற்றலுடன் போற்ற வேண்டும்; அப்போதுதான் யார் கேட்கும் கேள்விக்கும் உடனுக்குடன் விடை கூறி விளக்க முடியும். ஆனால், அவன் சிறந்த ஓர் ஆசிரியனாக இயங்க முடியாது;

மாணவர்கள் முன்காலத்தில் தனக்காகவே, அறிவை வளர்த்துக் கொள்ள கல்வியைக் கற்றார்கள். ஆனால், இக்காலத்திலுள்ளவர்கள் மற்றவர்களுக்காக தமது கல்வியைக் கற்கிறார்கள்!

கல்வி கற்பவர்கள் பிறர் கருத்துக்களைத் தெரிந்து கொள்வது நல்லது; நாம் நினைத்ததுதான் சரி என்று முடிவெடுத்துக் கொள்ளக் கூடாது; எந்தக் கருத்தை எவர் கூறினாலும், அதை எண்ணிப் பார்த்து எது நல்லது என்பதையே ஏற்றுக் கொள்ளல் நல்லது.

"உணவும், உறக்கமும் இல்லாமல் நான் அல்லும் பகலும் கற்க வேண்டியதைக் கற்றேன். ஆனால், நான் காணவேண்டிய, கற்றுத் தெளிய வேண்டிய முடிவைக் காணமுடியாததால், மீண்டும் அதை எவ்வாறு பெறமுடியும் என்ற முயற்சியிலேயே இரவும் பகலும் ஈடுபட்டு வருகிறேன்."

அப்படியானால், நான் எனது கடமையிலிருந்து தவறி விட்டேனா என்று கேட்காதீர்கள். கடமை, என்பது மனித இனம் முழுமையும் கடைப்பிடிக்க வேண்டிய ஒரு நேர்மையான பாதை என்பதை நன்றாக உணர்ந்தவனே நான்! அப்படி இருக்கும் போது தவறு செய்வேனா?

எங்கே உண்மையைக் காண்கிறோமோ அங்கே அதைப் பாராட்டுவதும் அதை முழுமையாகக் கண்டறிவதையே தொடர்ந்து முயல்வதும், எனக்குத் தெரிந்தவற்றை பிறருக்கு எடுத்து விளக்குவதுமே என்னுடைய கடமையின் இயல்பு என்ற உணர்வுடையவன் நான்.

மக்களின், மாணவர்களின் ஒழுக்கங்களைப் பற்றிக் கவனிப்பது, அரசனுடைய கடமைகளாகும்! அப்படியானால், கடமையாளன் குற்றமே செய்யமாட்டானா? என்ற கேள்வி எழலாம் இல்லையா?

குற்றம் எழலாம்; ஆனால், அந்தக் குற்றத்தைத் திருத்தாமல் இருப்பது, மீண்டும் ஒரு குற்றத்தைச் செய்

டவே அவனுக்குத் தைரியத்தைத் தந்துவிடும். அதனால், தனது குற்றங்களையும், குறைபாடுகளையும், தானாகவே உணர வேண்டும். ஆனால், அவ்வாறு தன்னையே வருத்திக் கொள்ளக்கூடிய ஒரு மனிதனை நான் இன்று வரை பார்த்ததே இல்லை.

அதனால்தான் கூறுகிறேன், அவரவர் தங்களிடம் உள்ள குற்றங்களை, குறைபாடுகளைக் களைந்தெறியச் சிறிதும் தயக்கம் காட்டக்கூடாது என்று கேட்டுக் கொள்கிறேன்.

கருணையற்ற அதிகாரமும், பக்தியற்ற ஆசாரமும், துன்ப உணர்வற்ற வருத்தமும் எனக்கு அறவே பிடிக்காத விஷயமாகும். மனிதன் ஒவ்வொருவனும் அவரவர் குற்றங்களை முதலில் திருத்திக் கொள்ள வேண்டும். அதைவிட்டு விட்டு பிறருடைய குற்றங்களைத் திருத்தும் முயற்சியில் ஈடுபடக்கூடாது.

ஒவ்வொருவருக்கும் அவரவர் அடைய வேண்டிய குறிக்கோள்கள் இருக்கும். அதில் மீறுவதும், குறைவதும் தவறு. வெளியுலகின் தீண்டுதலால் சங்கீதம் மனித இதயத்திலே இருந்து உதயமாகிறது.

தீமை செய்பவர்கள் யாராக இருந்தாலும்; அவர்களுக்கு நீதி பதிலாக அமைதல் வேண்டும். அன்பு செலுத்துபவர்களுக்கு அந்த அன்பே பதிலாக அமைதல் வேண்டும்.

தன்னைத்தானே ஒறுத்துக் கொண்டு, பிறர் விவகாரங்களில் தாராளமாக இருப்பவன், பிறருடைய வெறுப்புக்கு ஆளாவது துர்லபம்! பிறர் கூறும் விஷயங்களை முதலில் கூர்ந்து கேளுங்கள்; சந்தேகப்பட வேண்டிய செய்திகளை ஒதுக்கித் தள்ளுங்கள். அதற்கு இடம் கொடுக்காதீர்கள்.

பிறருக்கு நீங்கள் சொல்லும் விஷயங்களை, நிதான மாக கவனித்துக் கூறுவீர்களேயானால், கூடுமானவரை தவறுகள் நேராவண்ணம் நாம் தவிர்த்துக் கொள்ள முடியும்.

அதனால் பிறரிடம் எந்த விஷயத்தையும் கூர்ந்து, அக்கறையோடு கேளுங்கள்! அவற்றில் அபாயம் உள்ள சம்பவங்கள் இருந்தால் வெறுத்து விடுங்கள்; எனவே, எந்த விஷயத்தையும் பொறுமையாக, நிதானமாகச் செய்யுங்கள். பின்னொரு நேரத்தில், ஐயோ இப்படி நடந்து கொண்டோமே என்று உங்களுடைய செயல்கள் பற்றி நீங்களே வருந்திக் கொள்ளும் நிலைகளைத் தோற்றுவித்து விடாதீர்கள்.

ஆட்சியிலே இருப்போரின் சட்டங்கள், மக்களின் வாழ்க்கையை நெறிப்படுத்தும் வகையில் இருக்கவேண்டும். சட்டத்தை மீறினால் தண்டனை உறுதி என்ற அச்சம் மக்கள் உள்ளத்திலே பதியவைக்கும் சட்டங்களை அவர்கள் இயற்ற வேண்டும்.

பிறருடைய தவறுகளையும், குற்றங்களையும் விவரித்துக் கூறிக்கொண்டே இராதே. அதைவிட உன்னையே நீ எண்ணிப்பார்; உன் குற்றங்களை உற்று நோக்கித் தவிர்த்துவிடு! அதுதான் சிறந்த வழி!

இயற்கையால் உண்டாகும் துன்பத்தைக் கூடப் பொறுத்துக் கொள்ளலாம். ஆனால், உங்களுடைய தவறு களால் உருவாகும் துன்பங்களைப் பொறுத்துக் கொள்ளவே முடியாது.

அதுபோலவே, இன்பத்தையும், ஓய்வையும் மட்டும் அலைந்து கொண்டிருக்காதீர்கள்: அப்படி நீங்கள் ஒரு வேளை அடைந்தால் அவை நிச்சயமாக உங்களது கைப் பிடிக்குள் அகப்படாது.

எந்த ஒரு தகாத வழியிலும் செல்வத்தைச் சேர்க்க முயலாதீர்கள். நியாயமற்ற, நேர்மையற்ற வழியில் சேரும் பணமும், புகழும் வானத்தில் ஓடும் மேகங்களைப் போன்றவை என்பதை உணர்ந்து நடப்பது நல்லது!

நேர்மையான, மனச்சாட்சியான மனிதனைப் பார்க்கும்போது, அவன் குணங்களை நீங்களும் பெறுங்கள்; வாழ முயலுங்கள்; தீயவனைக் காணும்போது உங்களுடைய தவறுகளை நீங்களும் அகற்றி விடுங்கள்.

எதைச் செய்தாலும் கவனத்தோடு செய்பவர்கள் அவர்களது வாழ்க்கையிலே தவறுகள் செய்யவே மாட்டார்கள். ஒரு மனிதன் என்ன தவறு செய்கிறான் என்பதில் இருந்தே இவன் எப்படிப்பட்டவன் என்பதை நாம் புரிந்து கொள்ளலாம்.

அதுபோலவே நாம் தவறு செய்து விட்டோமே என்று அச்சமோ வெட்கமோ படாதீர்கள். இவ்வாறு செய்வீர்களேயானால், நீங்கள் மீண்டும் தவறு செய்வீர்கள்!

உங்களுடைய ஆற்றலால் விளையும் திறமைகளை பிறர் உணரவில்லையே என்று மனவருத்தப் படாதீர்கள். அதே பிறர், உங்களுடைய திறமையையும் ஆற்றலையும் உணரும் அளவிற்கு தொடர்ந்து செயலில் நடத்து காட்டுங்கள்.

மற்றவர்களால் வெறுக்கப்படும் மக்களை விரும்புபவன்; மற்றவர்களால் விரும்பப்படுபவர்களை வெறுப்பவன் இருக்கிறானே அவன், மனிதர்களின் இதயங்களைப் புண்படுத்துபவன் ஆவான்! ஆனால், அதே அவன் அனுபவிக்கப் போகும் துன்பத்தை நாம் அளவிட்டுச் சொல்லி முடியாது.

நேர்மையான மனிதன், தான் செய்வதைவிட பல விஷயங்களைப் பற்றி மிதமான அளவில் பேசுவானே

யானால், அவன் இதயம் இருக்கிறதே துன்பம் அது - துய்க்கும் நட்பு இதயமாகும்.

நேர்மையானவர்களிடம் வைக்கும் நட்பு, உண்மையானவர்களிடம் கொள்ளும் நட்பு, எதையும் பொறுமையாக, கூர்ந்து நோக்குபவர்களாக உள்ள சுபாவமுடையோர் நட்பு-என்னும் நன்மையையே தரும்!

தானென்ற அகந்தையுடன் தான்தோன்றியாகத் திரிபவன் நட்பு, ஆட்சி செய்யும் அதிகாரத் தோரணையர் நட்பு; 'நா' வடக்கம் இல்லாதவரின் நட்பு, இந்த சுபாவமுடையோர் நட்பு என்றும் நாசமே தரும்.

சின்னச்சின்ன நன்மைகளைப் பெறுவதற்காக, முயற்சியில் பெரிய நன்மைகளைப் பெறும் வாய்ப்பை நழுவ விட்டு விடாதே!

முகநகப் பழகாதே! அகநகப் பழகும்போது, அந்த நண்பனை அன்புடன் கண்டிக்கத் தயங்காதே! உனது கண்டிப்புக்கு அவன் இணங்காவிட்டால் அவனை விட்டு அகன்று விடு! அதற்காக, நீ பழிபாவங்களுக்கு ஆளாகாதே.

பிறக்கும் போது எல்லாரும் நல்லவர்களே! அவர்களுக்கு உலகமே இன்னதென்று தெரியாது! ஆனால், அப்படிப்பட்டவர்கள் நீண்ட நாட்களுக்கு அவ்வாறு இருக்க மாட்டார்கள்! பிறக்கும்போது பிறக்கும் குணம் போகப்போக மாறும்.

இந்த உலகம் மூன்று விஷயங்களில் நல்லதாகும்; அவை: ஆசாரங்களைப் பற்றிய ஆய்வில், சங்கீத ஆய்வில் பிறரைப் பற்றி நல்லது பேசுவதால் உண்டாகும் மகிழ்ச்சியில்.

நல்ல நட்பால் உண்டாகக் கூடிய மகிழ்ச்சியின் தீமைகள்: இன்பங்களையும் சுகபோகங்களையும் அளவுக்கு மீறி அனுபவிப்பது; சோம்பேறித் தனத்தால் உருவாகும்

மகிழ்ச்சி; உணவு வகைகளை சுவையாகச் செய்து அவற்றை இரையாக மதித்து உண்டு களிப்பது, இவை தீமைகளே என்று உணர்.

எங்கும், எப்போதும், எவரிடமும் நாவடக்கத்தோடு நடந்து கொள்ளவேண்டும். நமது முன்னோர்கள் அவ்வாறு நடந்து காட்டியே வாழ்ந்தார்கள். நாமும் அப்படித் தானே நடக்க வேண்டும்? இது உலகியல்.

அதிகமாக வார்த்தைகளைக் கொட்டாதே: அதிகப் படியான குற்றங்களை அது உருவாக்கி விடும்! அது போலவே ஒரே நேரத்தில் பல காரியங்களில் மூக்கை நுழைக்காதே. சூழ்நிலை இடையூறுகள் உன்னைச் சூழ்ந்து கொள்ளும்.

உன்னையே நீ தன்னடக்கத்தோடு உணர்ந்து பார். அழகு எனும் தத்துவச் சட்டத் திட்டங்களுக்குள் அடங்கி நட; அப்பொழுதுதான். நீ உன்னுடைய வாழ்வில் சில நெறிகளைக் காண்பாய் அல்லது உணர்வாய்!

நெறியுடன் நீ வாழ விரும்புகிறாயா? பசியைத் தணித்துக் கொள்; உனது வீட்டில் சுகபோக உணர்வுகள் இல்லாமல் இரு. எக்காரியத்தையும் உண்மையோடும், நேர்மையோடும் செய். நாவடக்கமாக இரு. நல்ல சீரான கொள்கைகளைக் கடைப்பிடி; நல்ல இலட்சியமுள்ளவர்களது நட்பை நாடு: அவர்களது நடத்தைகளின் அடிச்சுவடுகள் மீதுநட, இப்படிப்பட்டவன் யார் தெரியுமா? சகலகலாவல்லமை அறியும் ஆர்வலனாவான்.

பணம், புகழ்-மக்களால் விரும்பப்படுபவை. அதற்காக அவற்றை அடைய தவறான வழிகளில் நடக்காதே. வெறுத்து ஒதுக்கு. அதுபோலவே, ஏழ்மை, தாழ்மை நிலை-மக்களால் விரும்பப்படுவனவல்ல; இவை சரியான வழியில் கிடைக்கவில்லை என்றால், ஒதுக்கி விடாதே இவற்றை

தன் ஏழ்மை நிலை தனக்குப் பிடிக்கவில்லை என்றால் மன ஆண்மை பெற்றவன் யாருக்கும் கீழ்படிந்து அவன் நடக்க மாட்டான்; நெறியும், நேர்மையுமயற்றவனை வெறுத்தால் அவன் அனைவருக்கும் கீழ்படியவேமாட் டான்.

வில் பயிற்சியில் அம்பு எய்யும் போது அது குறி தவறி னால் காரணம் என்ன என்று கண்டு பிடிப்பவன் நேர்மை யான மனிதன்! அற்பன் இருக்கிறானே அவன், இது போன்ற சம்பவத்தில் தவறின் காரணத்தைக் காணாமல்- பிறர்மேல் அதைச் சுமத்துவான்: பிறரிடம் அதைக்கண்டு பிடிக்கவே முயல்வான்!

நேர்மையாளன் பேச்சில் அடக்கம் ஊஞ்சலாடும்! வீணாகப் பேசி நேரத்தைக் கழிக்காமல் நேர்மையான செயலில் ஈடுபடுவான்; எது தேவையோ அதையே பேசு வான்; எப்போதும் நடுநிலையோடு நிற்பான்.

எல்லாரையும் விரும்புவான் நேர்மையாளன்; பிறரைப் பற்றி நல்லதையே பேசுவான்; நட்பிலே கண்ணியம், நேர்வை காப்பான்; தன்னுடைய முன்னேற்றத்தைப் பிறருடைய முன்னேற்றத்திலேயே பார்த்து மகிழ்வான்; துன்பப்படுவோர் துயர் துடைப்பான்; அவன்தான் நேர்மை யான மனிதன்.

இன்றைய உலகில் ஒரு ஞானியைப் பார்ப்பது கடினம்; ஆனால், ஒரு நேர்மையான மனிதனை நான் பார்த்து விட்டால் ஆகாயத்தில் கூடப் பறந்து விடுவேன்! அவ்வளவு மகிழ்ச்சி ததும்பும்.

உலகமெனும் பரந்த வீட்டில் வாழ்பவன் நேர்மை யாளன்; உலக வாழ்வில் தன்னுடைய நிலையில் வாழ்ப வன்; நேர்மையான சாலையில் வழி நடப்பவன்; பணம் அவனுக்குத் துரும்பு; அதற்காக மயங்காதவன்; வறுமை

கண்டு வாடாதவன்; அதிகாரபலத்துக்காக வளையாதவன்! அவன்தான் நேர்மையான மனிதன்.

நீதி, நேர்மை, கண்ணியம், கடமை, கட்டுப்பாடு; ஆசார விதிகள் தவறாமை; எக்காரியத்தையும் தனது திறமையினாலேயே செய்து முடிக்கும் துடிப்பானவன்; இவன்தான் நேர்மையாளன்.

உலகம் போற்றும் பணியாளன்; பழுத்த பண்புகளைச் சுவைப்பவன்; தனது நல்லியல்புகளைத் தலையாகக் கருது பவன்; இவன்தான் நேர்மைக்குரிய நெஞ்சினன்.

பதவியே குறிக்கோளாகக் கருதுபவன் அற்பன்; அடுத்த வரை ஆள்காட்டியே வாழ்பவன் அற்பன்; குற்றேவல் செய்தே குறைகூறி வாழ்பவன் அற்பன்; பிறர் தயவை நம்பியே கையேந்தி பிழைப்பவன் அற்பன்; இவன் கௌரவம் உள்ள நேர்மையாளனின் பரம விரோதி!

நீதிநெறி எங்கும் நிறைந்து தோற்றமளிப்பதைச் சாதாரண மக்களால் புரிந்து கொள்வது மிகக்கடினம்; கடவுளால் அளிக்கப்பட்டதைக் கூட மனித இயல்பு என்று கூறிவிடுகின்றோம். அந்த மனித இயல்பின் கடமையை நிறைவேற்ற உதவுவதைத்தான் நீதிநெறி என்கிறோம். அந்த நீதிநெறிகளின்படி நடப்பதைத்தான் நாம் பண் பாடு என்று போற்றுகிறோம்.

உண்மையைக் கடைப்பிடிப்பவர்களுக்கு கவலை இல்லை; அறிவுடையவனுக்குத் தயக்கம் இல்லை; உள்ளத் துணிவுடையவனுக்கு நெஞ்சில் அச்சம் இருக்கயிட மில்லை.

நேர்மையை அறிந்தவனை விட, அதை விரும்புபவன் சிறந்தவன்; அதை விரும்புபவனைவிட கடைப்பிடித்து மகிழ்ச்சி பெறுபவன் தலை சிறந்தவன்; மிகவும் உயர்ந்த நிலை மனப்பண்பும், மிகத் தாழ்வான நிலையில் உள்ள மனப் பண்பும் என்றுமே மாறுவது இல்லை.

வாழ்க்கையைப் பற்றியே மக்கள் இன்றுவரை சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. பிறகு எப்படி இவர்கள் மரணத்தைப் பற்றிப் புரிந்து கொள்வார்கள்?

எந்தக் காரியத்தையும் செய்ய முற்படும்போது; அதைச் செய்வதால் ஏற்படக் கூடிய முடிவை முன் கூட்டியே சிந்தித்துப் பார்த்த பிறகு அதைச் செய்திட்டால் உறுதியாக வருந்தத்தக்க முடிவு எதுவும் அமையாது

நமக்குக் கிடைக்கவில்லையே-பதவிகள் என்று கவலைப் படாதீர்கள்; ஆனால், அவை ஒருநாள் நம்மைத் தேடி வரக்கூடும் என்ற முடிவில் உங்களையே நீங்கள் தகுதியுடைய செயல் அல்லது தொண்டு வைரமாக மாறுங்கள்.

நீங்கள் தான் பலமுள்ளவர்கள் என்று எண்ணி விடாதீர்கள்; உங்களை விட ஒரு பலசாலி இருக்கிறான் என்பதை மட்டும் மனதில் கொள்ளுங்கள்.

பகலில் வெண்மை பகட்டு; தோற்றத்தில் அமைதி மனதில் பலவீனமான சிந்தனை. அறியாமை கொண்டு வாழ்பவன்; இரவில் சுவர் பொந்துகளின் துவாரத்தின் வழியுள்ளே நுழையும் திருடனே!

பேசும் வார்த்தை நயங்களைக் கேட்டு ஒருவனை மதிப்பிடாதே; பண்பட்ட உலகில், பண்பட்ட மனித நெறியினைப் பார்க்கும் நாம், பண்படாத உலகில் வெறும் பகட்டானப் பேச்சுக்களை மட்டும்தான் பார்க்க இயலும்!

படிக்காதவர்களிடமும், பாவையர்களிடமும் பழகுவது மிகவும் கடினமான காரியம்தான்! என்ன செய்வது? இவர்களிடம் நெருங்கிப் பழக முற்பட்டால் நம்மைப் பயன் படுத்திக் கொள்வார்களே! புறக்கணித்தாலும் அவர்கள் அதை விரும்பமாட்டார்களே!

நன்மை செய்பவர்களுக்கு நாம் நன்மையே செய்ய வேண்டும்; அதனால், மக்கள் நன்மையைச் செய்ய நாம் பழக்குகிறோம் என்று பொருள்.

தீமை செய்பவர்களுக்கு தீமையே செய்யுங்கள், அதனால், மக்களை தீமை புரியாதவாறு நாம் தடுத்து விடுகிறோம் என்று பொருள்!

அழகிய ஆத்மா உடையவன் அழகான விஷயங்களைப் பற்றித்தான் பேசுவான்; ஆனால், அழகிய விஷயங்களைப் பேசுகிறவன் அழகிய ஆத்மாவைக் கொண்டவன் என்று கூறமுடியாது.

இளைஞர்களே! உங்களுடைய குடும்பத்திற்கு நல்ல புதல்வர்களாக இருங்கள்! சமுதாயத்திற்கு அடக்கமும், வணக்கமும் உடையவர்களாகத் திகழுங்கள்; ஒழுக்கத்தின் விழிப்புடையவர்களாக விளங்குங்கள்; பொதுமக்கள் இடத்தில் அன்புடையவர்களாக, பண்புடையவர்களாக, கருணையாளர்களாக, நற்குணமுடைய நண்பர்களாக இருந்து வாழுங்கள்! இவையெலாம் செய்து முடித்த பிறகு உங்களுக்கு நேரம் இருந்தால் அறிவு நூற்களைக் கற்று ஞானிகளாக நடமாடுங்கள்.

உண்மை என்ற உணர்வுடைய ஒரு பொருளுக்கு பெருமை தேடுங்கள், உண்மையோ-மனிதன் பெருமையடையுமாறு செய்யாது. உண்மை என்றுமே மனித இயல்பை விட்டு விலகுவது கிடையாது. உண்மையானது மனிதப் பண்பினிடமிருந்து பிரிந்து காணப்பட்டால், அதை உண்மை என்று உரைப்பதே தவறு!

உண்மையை விரும்புபவன், அதை அறிந்தவனைவிட சிறந்தவனாகிறான்; அதை விரும்புபவனைவிட உண்மையில் மகிழ்ச்சி காண்பவன் உத்தமமான உயர்ந்த மனிதன் ஆகிறான்!

உலகம் நிலையற்ற நிலையில் தத்தளித்துக் கொண்டிருந்தபோது அந்த உலகத்தைச் சீர்த்திருத்திட கன்பூசியஸ் என்ற காற்று சீன மண்ணிலே தவழ்ந்தது.

காற்றடித்தால் புற்கள் தலை வணங்குவது போல. சீனத்து மக்கள் அந்த ஞானி கூறிய மேலே கண்ட கருத்து களை நம்மை மேம்படுத்தும் எண்ணங்கள் என்று தலை வணங்கி வரவேற்றார்கள்! வாழ்த்திக் கொண்டே இருக் கிறார்கள்!

## 2. கன்பூசியனிசமும்; பொதுநல ராஜ்யமும்

இன்றைக்கு ஈராயிரத்து ஐநூறு ஆண்டுகளுக்கு முன் பிருந்த சீனநாட்டின் பழமைப் பண்புகளை அடிப்படை யாக அமைத்து அதனமீது அறநெறிகளை உருவாக்கி; ஓர் இலட்சியக் கொள்கையை உலகுக்கு அளித்தவர் ஞானி கன்பூசியஸ். அதைத்தான் இன்றும் 'கன்பூசியனிசம்' என்று உலகம் போற்றுகின்றது.

ஈராயிரத்து நூறு ஆண்டுகளுக்கு முன்பு கன்பூசியஸ் வாழ்ந்த காலத்திலிருந்து இன்று வரை கால வளர்ச்சியும் கருத்து வளர்ச்சியும் படிப்படியாக வளர்ந்து வந்துள்ளது. ஆனால், மனித இனத்தின் மனமும்; மனித இயற்கையும் இன்றுவரை மாறாமல் இருக்கின்றன.

கன்பூசியஸ் உயிரோடு வாழ்ந்த காலத்தில் நிலையற்ற உலகு தத்தளித்தபோது மனித இனவாழ்வை மாற்ற வேண்டும் என்று எப்படி பரபரப்புடன் அவர் சிந்தனை செய்தாரோ, அதே பரபரப்புடைய ஒரு சமூக வாழ்வை அடைவதற்கு உலகமும் துடித்துக் கொண்டுதான் உள்ளது.

மனிதன் மகிழ்ச்சியோடும், அறநெறிகள் சூழ்ந்த வாழ வோடும் வாழ்வது எப்படி? என்ற கன்பூசியனிசம் திட்டம் போல உலகில் வேறு எந்த ஞானியும் சிந்தித்ததில்லை என்றாலும், மேனாட்டுத் தத்துவ ஞானத்திற்கும்-சீனத்

இன் தத்துவத்திற்கும், குறிப்பாக, கன்பூசியசின் தத்துவத்திற்கும் அடிப்படையில் சில வித்தியாசங்கள் இருக்கின்றன.

மேற்கு நாட்டுத் தத்துவம், அறிவியலோடும்-மதத்தோடும் சார்புடையது; அறிவை-அறிவிற்கே அடையும் லட்சியமுள்ளது; வரம்பற்றது அறிவு என-நம்பும் நம்பிக்கை உடையது.

ஆனால், சீன நாட்டு தத்துவமோ, அறச் சார்புடன் உறவாடுவது; அரசியல், இலக்கியம், கலைகளோடு நெருக்கமுடையது. அறிவுக்கு வரம்புண்டு என்று வரையறுக்கும் சிந்தனை பெற்றது.

நற்செயல்களுக்காகவும், சாதனைகளுக்காகவும் அறிவை ஓர் துணைக் கருவியாக உபயோகப்படுத்த எண்ணுவது; மனிதனின் விஞ்ஞானச் சக்திகளையும் மீறி; அவனது ஒழுக்கப் பண்புகளையே பெரிதாக வளர்ப்பது: தன்னைப் பண்படுத்தும் தத்துவத்திற்கே முதலிடம் தருவது மனிதத் தன்மை, அன்பு வழி, அறநெறி, சமூக உறவுகள், கடமைகள், ஒழுக்க விதிகள் போன்றவற்றில் ஈடுபடும் தன்மையுடையது.

உலகின் தத்துவங்களை; அதாவது எதிரிடை இரட்டைகளாகப் பார்ப்பது மேனாட்டுத் தத்துவம்! குறிப்பாக, கிரேக்க நாட்டு மேதை பிதாகொரஸ் என்பவன் அதைச் செய்தான்-பேசினான்!

'எதுவும் இரண்டல்ல; ஒன்றுதான்' என்ற பிதாகொரசை எதிர்த்து எதிர்வாதம் புரிந்தான்-அதே கிரேக்க நாட்டின் பேரறிவாளன் ஹெராக்ளிட்டஸ் என்பவன்!

'காலம் நிலையான ஒன்றல்ல' என்பதாலும், மாறுதல் என்பது இயற்கையின் நியதி' என்ற கருத்து மோதல்

கிரேக்க நாட்டின் அறிவியலாளர்கள் இடையே ஒரு பெரும் போரே நடந்ததால் உண்மைகள் சில உலகுக்குக் கிடைத்தன.

அதனைப்போல, உலகின் தன்மைகளை எதிர் எதிராகப் பிரித்துப் பார்த்ததும் அதே மேனாட்டுத் தத்துவம் தான்! தெய்வீகம்-மானிடம், அருபம்-தத்ருபம்; லட்சியம்-நடைமுறை; சுதந்திரம்-அதிகாரம்; தனி மனிதன்-சமூகம் என்பதே அந்த இரட்டைகளாகப் பார்த்த பண்பாகும்!

ஆனால் சீனத்துத் தத்துவம் அத்தகையதன்று! இரட்டைகளை இணைத்து ஒருமுகப்படுத்திப் பார்ப்பது, மனிதன் உலகின் ஓர் அம்சம்! அதுபோலவே-உலகமும் மனிதனின் ஓர் உறுப்பாகும் என்பதே சீனத் தத்துவம்.

சீனர்களின் இந்த தத்துவத்திற்கு ஆதி அடிப்படையாக இருப்பது 'யாங்—யின்' என்ற தத்துவக் கொள்கையாகும். யாங்-என்றால் ஆண்மை; படைக்கும் ஆற்றலுடையது; உற்பத்தி சக்தி; வானத்துச் சூரியனும் சுவர்க்கம் அல்லது வானகத்திற்கு இணையானது; ஈடானது.

'யின்' என்பது பெண்மை; ஒன்றிலிருந்து ஒன்றை கிரகிக்கும் ஆற்றல் வாய்ந்தது. வானத்து நிலவிற்கும்-பூமிக்கும் இணையானது. இவை இரண்டும் இயற்கையின் இரட்டை சக்திகள்! இவற்றின் கலப்படப் பொருள்தான் இந்த உலகம்!

ஆண்மை-பெண்மையான 'யாங்-யின்' என்ற இந்த இரு இயற்கை சக்திகள் வானகமும்-வையகமும், சூரியனும் சந்திரனும், ஒளியும்-இருளும்; பிறப்பும்- இறப்புமாகும்!

மனிதன் தனது உடலை பூமியில் இருந்து, அதாவது 'யின்' எனும் பெண்மையிடம் இருந்துப் பெறுகிறான்!

ஆத்ம உருவை, வானத்திடம் இருந்து, 'யாங்' எனும் ஆண்மையிடம் இருந்து-பெறுகிறான்!

இந்த யாங்-பின் எனும் தத்துவம் நமது சைவ சமயத்தின் சிவன்-சக்தி, பரன் பரை, அம்மை-அப்பன் என்ற தத்துவத்தை நினைவூட்டுகிறதா-இல்லையா? சிந்தித்துப் பாருங்கள். இதை விவரித்தால் நூல் பெருகும்! நமது நோக்கமும் இதுவன்று!

'பாகுயா' அல்லது எட்டு திரிகோணம் எனும் குறிநூல் இந்த தத்துவத்திலே இருந்து பிறந்து, சீன தத்துவத்திற்குரிய தத்துவத் தொட்டிலாக அமைந்தது!

சித்திரக்குறி நூல் என்று இந்நூலைச் சீனர் கூறுவர். நேர் கோடுகளின் அமைப்புகள் பல வகைகளில், ஒரு வட்டத்திற்குள் எட்டு திரிகோடு வகுப்புகளாக அமைந்திருக்கும் ஒரு சின்னமே இந்த எட்டு திரிகோணமாகும்.

சித்திரத்தின் நடுவில் ஒரு வட்டம்! அதனுள் இருப்பவை சிருஷ்டியைக் குறிக்கும் சின்னம். அதைச் சுற்றி எட்டு விதமான திரிகோடுகள் அமைக்கப்பட்டுள்ளன. ஒரு நேரான கோடு (—) 'யாங்', எனும் ஆண்மையைக் குறிக்கும் சின்னம். அதாவது, அனுலோம தத்துவத்தின் சின்னம். ஓர் உடைந்த கோடு (– –) 'பின்', எனும் பெண்மையைக் குறிக்கும் சின்னம். அதாவது, விலோம தத்துவத்தின் சின்னம்.

உலகத்தின் எட்டு அடிப்படை மூலங்களை, ரேகா உருவமாக எட்டு திரிக்கிரமம் குறிக்கிறது. அவை, வானகம், பூமி, இடி, தண்ணீர், மலை, காற்று, நெருப்பு, சதுப்பு நிலம்.

இந்த எட்டு திரிக்கிரமச் சித்திரம், பழங்காலத்தில் ஓர் ஆமை ஓட்டின் குறிகளிலிருந்து புராண காலத்தில் மா மன்னர் ஒருவரால் உருவானதாகக் கூறுகிறார்கள்.

அதற்குப் பின்னர், 'செள' வம்சத்தை உருவாக்கிய மாமன்னராலும், அவருடைய புதல்வராலும் எட்டு திரிக் கிரமத்திற்கு பொருள் வியாக்கியானங்கள் கூறப்பட்டன; அவையே உருவக் கிரந்தம், சகுணம், சோதிடம், ரகசிய சாஸ்திரம் ஆகியவற்றுக்கு அடிப்படையானவை.

அந்த வியாக்கியானங்கள் விளைவாக, யிங்-கிங் எனப் படும் பரிணாம இலக்கியம்-அல்லது பேத நூல் தோன்றியது என்று சீன வம்சத்தவர்கள் எண்ணுகிறார்கள்.

மறை ஞானி கன்பூசியஸ்தான் இந்த மறை பொருள் சாஸ்திரமான அந்த நூற்களுக்கு முதன் முதலில் புது தத்துவ வடிவம் கொடுத்திருக்கிறார். இது மட்டுமன்று. புனிதத் திருமறைகளாகவும், பண்டைய காலப் பேரிலக் கியங்களாகவும் போற்றப்பட்ட சீன நூல்கள் அனைத்தை யும் கன்பூசியஸ் ஆராய்ந்து அவற்றைத் தொகுத்து மனித சமுதாயக் கண்ணோட்டத்தில் நூல்களாகப் பதிப்பித் துள்ளார்.

அந்த நூல்களாலும், அவரது போதனைகளாலும் ஒரு புதிய கொள்கையைப் பரப்பி, உலகத்தின் முன் ஒரு மாபெரும் இலட்சியத்தைக் கொண்டு வந்து நிறுத்தினார். அதுதான் 'கன்பூசியனிசம்!

கன்பூசியசுக்கு முன்பே சீன நாட்டின் பல மகா மேதை கள் தோன்றி பலவிதமான கொள்கைகளைப் பரப்பியிருக் கிறார்கள். ஆனால், சீன நாட்டின் மக்களது மனோநிலை களிலும் தத்துவஞான நூற்களிலும் பரவியிருக்கும் தத்து வங்களில் மிகவும் முக்கியமானவை அந்த நான்கு நூல்கள் தான். அந்த நூல்கள் எவை?

கன்பூசியனிசம்; இது ஓர் அறநெறிகளின் ஒழுக்க நூல்; யார் யார் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என்ற வழிகளைக் கூறும் ஒழுக்க மார்க்கம்! சமுதாய மனிதனைப் பண்படுத்தும் மனிதத் தத்துவம்! சீன மக்களது வழி வழி பரம்பரையினர் கடைப்பிடித்து வந்த ஒரு வாழ்வியல் நடத்தை இயல்!

இரண்டாவது, லே ஓ-ட்சே என்பவர் தொகுத்த டா-ஒஸம்! இது ஒரு ஞான மார்க்க வழிபாடு! இயற்கையின் சக்தி வழியே மனதைப் பக்குவப் படுத்தும் ஓர் உள்ளொளி எனும் ஆன்மீகத் தத்துவ நூல்! அதாவது "ஆக இயல்"!

மூன்றாவதாக, மோட்-ஸே என்பவர் உருவாக்கிய 'மோசிஸம்' என்ற நூல்! இது அருள்வழியே சமதர்ம நெறியில் புது உலகம் அமைக்கும் முற்போக்குத் தத்துவங்களைக் கொண்டது. இதற்கு 'ஆக்கு இயல்' என்று பெயர்.

நான்காவதாக, 'லீ-ஸிஸம்' என்ற நூல். இதன் ஆசிரியர் ஹான் பெயிட்ஸே என்பவர்! இது ஒரு சட்ட நூல். சமுதாய ஒழுங்கை, அமைதியை நிலைநாட்டப் பயன்படும் அதிகாரத் தத்துவம், இதனை ஆட்சி இயல் என்றும் கூறுவர்! சைனாவில் இப்போதுள்ள கம்யூனிச வாதிகள் அந்த சட்ட இயலைப் பயன்படுத்துகிறார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நான்கு நூல்களும் ஒன்றுக்கொன்று முரண்பட்டவை என்றாலும், இந்நூல்களின் கருப்பொருளும் அவற்றின் வளர்ச்சிகளும்தான் சீனதத்துவ வரலாற்றில் நிறைய பண்பும்-பயனுமாகக் காணப்படுகின்றது.

## கன்பூசியனிசம் என்றால் என்ன?

கன்பூசியனிசம் என்ற இலட்சியக் கொள்கையை உருவாக்கியவர் ஞானி கன்பூசியஸ் ஆவார்; கன்பூசியனிசம்

என்பது மனித தத்துவத்தை மூலாதாரமாகக் கொண்ட ஒருவித் பொது ஒழுக்க சமுதாயப் பண்பாடாகும்.

தனிமனித பண்பில் மேன்மையான ஓர் உயர்வை உரு வாக்குவது; பொது மனிதனாக சமுதாயத்தில் நல்லுற வுடன் நடப்பது; இந்த இரண்டையும் அன்பு வழியே கடைப்பிடிப்பது: அறநெறிகள் வழியாக இந்த இரண்டை யும் வளர்ப்பது; ஒரு தேசிய பண்பாட்டை உருவாக்குவது; அந்தப் பண்பாடு மூலமாக உலகம் முழுவதற்குமாக ஒரு பொது ஒழுக்கத்தைப் பேணிக் காப்பது;

தனிமனிதனுக்குரிய நல்வாழ்க்கையும், அதற்கான சமுதாய அமைதியை உலகமெங்கும் வளர்த்து வளமாக்கு வது; இந்த இலட்சியத்திற்காகவே மனிதனின் அறிவு, அறவுணர்ச்சி, கல்வி வளர்ச்சி கலைப்பயிற்சி, பண்டைய கால பழக்கவழக்க ஆசாரங்கள், நல்ல அரசு, வானகசக்தி, இயற்கை கூறுபாடுகள் எல்லாம் பயன்பட்டாக வேண்டும், இதுதான் 'கன்பூசியனிசம்' என்ற சித்தாந்தத்தின் கருப் பொருள்களாகும்,

இந்த சித்தாந்தம் நடக்கக் கூடியதுதானா? என்று சிலர் ஆச்சரியப்படலாம்! நமது நாட்டு சங்ககாலக் கவிஞ ரான கணியன் பூங்குன்றனார் என்பவர், எல்லா நாடு களும் நமது நாடுகள், எல்லா மக்களும் நமது உறவினர்கள் என்ற தத்துவ அடிப்படையில் 'யாதும் ஊரே-யாவரும் கேளிர்' என்று கவிதை எழுதவில்லையா?

பூங்குன்றனார் கவிதையின் உட்பொருள் என்ன? உலகம் ஒன்றே-மக்கள் அனைவரும் உறவினரே, சகோ தரர்களே என்ற ஒரே உலகம், ஒரே சமுதாயம், ஒரே ஆட்சி என்ற பொருள்தானே? இது நடக்குமா? நடக் காதா? என்றா அவர் சிந்தித்தார்? இவரும், கன்பூசிய சுக்கு முன்பே இக்கருத்தைப் பாடியவர் தானே!

இந்தக் கருத்தை, நமது இந்திய முன்னாள் பிரதம ராக இருந்த இந்திராகாந்தி அம்மையார், தனது சோவி

யதி ருஷ்யா சுற்றுப் பயணத்தின் போது-மாஸ்கோ விழா ஒன்றிலே எடுத்துக்காட்டி பெருமைபடட்டு இந்திய பண்பியலுக்கு ஆதரவு காட்டவில்லையா?

எனவே, கணியன் பூங்குன்றனார் தத்துவத்தைத் தான், இரண்டாயிரத்து நூறு ஆண்டுகட்கு முன்பிருந்த கன்பூசியஸ் என்ற ஞானியும் சிந்தித்தார்! அதைக் 'கன்பூசியனிசம்' என்று இன்று நாம் அழைக்கின்றோம் அவ்வளவுதான்.

ஞானி கன்பூசியசின் இந்தத் திட்டம், கனவோ கற்பனையோ என்று எண்ணக்கூடாது. இது ஓர் உலகப் பொதுத்திட்டம்! மக்களின் சிந்தனையும் செயல்பாடுகளும் சரியான ஒத்துழைப்புக்களும் இருந்தால், இந்த உலகில்-இந்தத் திட்டம் நடைமுறைக்கு வரக்கூடிய ஒன்று தான், வரவேண்டும் என்றுதான் கணியன் பூங்குன்றனாரும், கன்பூசியசும் ஆசைப்பட்டார்கள். இந்த ஆசையை உலக மக்களின் கைகளிலே அவர்கள் ஒப்படைத்தார்கள். வெற்றியும் தோல்வியும் உலகம் கையில்தானே!

இந்த உலகப் பொதுத் திட்டம். மனிதர்களை ஓர் அமைப்பின் கீழ் அடிமைப் படுத்திடும் திட்டம் அல்ல! மனிதர்கள் தாங்களாகவே விரும்பி உருவாக்கும் திட்டமாகும்! இதற்கு அடிப்படை ஒரு பொது அறநெறி; மனிதனின் செயல்! அந்த அறநெறிகளோடு மனித முயற்சிகளும் நடந்தால் உலகம் ஓரே சமுதாயமாக, மனித சமுதாயமாக, மாறும் என்பது திண்ணம்!

## பொதுநல ராஜ்ஜியம் தோன்றக் காரணம் என்ன!

கன்பூசியஸ் பிறந்தபோது. சீன நாட்டின் மத்திய ஆட்சி பலங்குன்றி சிதைந்துக் கிடந்தது! அப்போதிருந்த அரசுகள், நிலவுடைமைச் சீமான்கள், குறுநிலத் தலைவர்கள் அவர்களது விருப்பம்போல சர்வாதிகாரிகளானார்கள்-தான்தோன்றித் தர்பார் நடத்தினார்கள்,

இவர்களது ஏகபோக அதிகாரப் போக்கால், உழவர் பெருமக்கள் பெருத்த வேதனைகளை அனுபவித்தார்கள். அரசு மதமாகவும், அரசவை தெய்வீகசபையாகவும், அரசர்கள் தேவதூதர்களாகவும் நடந்து கொண்டதால், டலாதிகாரங்களின் மூலமாக மக்களிடமிருந்து எல்லா வரிகளும் வசூலிக்கப்பட்டன! எனவே எல்லா சிற்றரசுகளின் அன்றாடச் செயல்களும் மதச் சடங்குகள் போலவே நடந்து வந்தன!

இதன் காரணமாக குருமார்கள் ஆதிக்கம் வலுத்தது. அரசர்க்கும் மக்களுக்கும் இடையே ஒவ்வொரு ஆச்சார அர்த்தத்தை விளக்கி வியாக்கியானம் கூறும் இந்த குருமார்கள்-சமுதாயத்தில் தனியொரு சாதியாகப் பிரிந்து, வாழ்ந்து உயர்ந்து நின்றார்கள்.

இதனால், கோஷ்டிச் சண்டைகள் பெருகின; ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்தன; விதண்டா விவாதங்கள், போட்டிப் பொறாமைச் சச்சரவுகள். சிற்றரசர்களுக்குள்ளேயே போர் நிலைகள், அதனால் மக்கள் இடையே உள்நாட்டுக் குழப்பங்கள் உருவாகி மலிந்தன.

கன்பூசியஸ் வாழ்ந்தபோது, மத்திய ஆட்சி பலவீனமாகியதால், சட்ட அமைப்பு, சமுதாய அமைப்பு, பொருளாதாரச் சீர்குலைவு, அறநெறி அழிவுகள் எல்லாம் உடைந்து சின்னாபின்னப்பட்டு, பொது மக்களது வாழ்க்கை நிலைக்கு உத்தரவாதமற்று, சீன நாட்டு மக்கள் அல்லோலகல்லோலமாக உருக்குலைந்து ஒழுங்குமுறையற்று வாழ்வதைக் கன்பூசியஸ் நேரிடையாகவே பார்த்தார்!

அரசன் அரசனாக நடக்காவிட்டாலோ, அமைச்சர் அமைச்சராக இயங்கா விட்டாலோ உலகில் குழப்பம்தான் உருவாகும் என்பதை அப்போதுதான் கன்பூசியஸ் உணர்ந்தார்.

அதனால், ஒருங்கற்றுக்கிடக்கும் உலகை சீர்திருந்திட; மனித சமுதாயத்தின் கடமைகளைப் பற்றி மக்களிடையே பேசினார். அதற்கான அறநெறிகளை உருவாக்கினார்.

மனித உறவுகள் இடையே உள்ள பொறுப்புகள், அரசுக்கும்-மக்களுக்கும் உள்ள உறவுத் தொடர்புகள்; அதற்கான முறைகள்; ஒரு தனிக் குடும்பத்தில் உறுப்பின ரிடையே உள்ள-உணர்வு, உறவு முறைகள், எல்லாவற்றை யும் கண்ட அவர், நோய் கண்டவனுக்குக் கொடுக்கும் மருந்துகளைப் போல இந்த சீர்திருத்தங்களை வழங்கி னார்!

கன்பூசியசின் இலட்சியத்தின்படி, வானகம், அரசாங் கம், பொதுஜனம் இவை மிக உயர்ந்த முப்பெரும் சக்தி கள் என்பதை உணர்த்தினார். மனித வாழ்க்கைக்குரிய கட்டுப்பாடுகளையும், சட்டங்களையும் வானகம் உண் டாக்குகிறது. அந்தச் சட்டங்களை அரசு அமுலுக்குக் கொண்டு வருகிறது. ஆணும் அதிகாரிகளும், மக்களும் அந்தச் சட்டங்களுக்கு ஏற்றவாறே வாழ்கிறார்கள்.

இவை மதத்தால் உருவான ரகசியமல்ல; இயற்கை யின் உருவெளித் தோற்றத்திலும், மனித சமுதாய வடிவி லும் அவை தானாகவே உருவாயின. அதற்கான அறிவு, தலைமுறை தலைமுறையாக உலகில் வழங்கப்பட்டு வந் துள்ளது. அதனால், இந்தக் கொள்கையை நிலை நிறுத் தும்போது, வானகத்துச் சட்டங்களுக்கும்-பூலோகத்து மனிதனுக்கும் இடையே மதகுருக்கள் என்ற பெயரில் தனி யொரு சாதிப் பிரிவுத் தேவையில்லை. அரசாங்கமும், மக்களும் தங்களுக்கென தனி மதச் சட்டங்களை உருவாக் கிக் கொள்ள முடியாது என்று கன்பூசியஸ் மக்களுக்கும் பகிரங்கமாக எடுத்துரைத்தார்.

மக்கள் நலன், வாழ்க்கை வளம், இந்த இரண்டின் அடிப்படை நோக்கில்தான் ஓர் அரசு அமைக்கப்படல்

வேண்டும். இதற்கு திறமை மிகுந்தவர்கள் அரசில் இடம் பெறவேண்டும். அந்தத் திறமை, பிறப்பு, செல்வம், உயர்சாதி, ஆகியவற்றால் உருவாவதில்லை. மனப்பண்பு, அறிவு இவை போதும் அந்த திறமை உருவாக என்கிறார் கன்பூசியஸ்.

இந்த சீன நாட்டுச் சீர்குலைவைக் கண்டதால் தான். கன்பூசியசுக்கு பொதுநல ராஜ்ஜியம் என்ற ஒன்று உருவாக வேண்டும் என்று சிந்தித்தார் இந்த பொதுநல அரசாங்கம் பற்றி அவர் என்ன கூறுகிறார் என்று கேட்போமா?

'தாவோ' என்றால்-'அறவழி' என்று பொருள். இந்த அறநெறியைப் பயன்படுத்தும்போது, பொதுஜன, பொதுநல உணர்ச்சி-உலகம் எங்கும் பரவி இருந்தது. திறமை, பண்பு, விசுவாசம் உள்ளவர்கள்தான், இந்தப் பொறுப்பான பதவிகளுக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். சகோதரத்துவப் பாசமும் அதில் பண்படுத்தப்பட்டது

மனிதர்கள் தங்கள் சொந்தப் பெற்றோர்களை மட்டும் நேசிக்கவில்லை; சொந்தக் குழந்தைகளை மட்டும் பிள்ளைகளாக நடத்தவில்லை; வயதான முதியோர்கள் எல்லாம் அவர்கள் சாகும்வரை கவனமாகவே பாதுகாக்கப் பட்டார்கள்.

உடல்சக்தி உள்ளவர்களுக்கு பணி, சிறுவர்கள் படிக்கக் கல்வி வசதி, உணவு ஏற்பாடு, விதவைகள், அனாதைகள், பிச்சைக்காரர்கள், பிள்ளை இல்லாத பெற்றோர்கள், நோயாளிகள், உழைக்க முடியாமல் உடல் நலிந்தவர்கள் போன்றவர்களுக்கு எல்லாம் அவரவர் தேவைகளை அதில் நிறைவு செய்யப்பட்டிருந்தன.

ஆண்களுக்கு உரிய தொழில்களும், பெண்களுக்குக் குடும்பப் பணிகளும் இருந்தன. சாமான்கள் வீணாகக் கிடப்பதை அவர்கள் வெறுப்பார்கள்; ஆனால், சொந்த உபயோகத்திற்காக அவற்றைப் பதுக்கி வைக்கமாட்டார்

கள். தங்களது சக்திகளை முழுமையாகப் பயன்படுத்தப் படுத்தப்படுவதை அவர்கள் விரும்புவார்கள்.

ஒருவரை ஒருவர் கெடுக்கும் சூழ்ச்சித் திட்டங்கள் அடக்கி வைக்கப்பட்டு அவை வளரவிடாமல் தடுக்கப் பட்டன. திருடர்கள், கொள்ளைக்காரர்கள், துரோகிகள் போன்றோர் தலைகாட்ட முடியாது. அதனால் எந்தவிதத் தீமையும் பயமும் ஏற்படாது. ஒவ்வொரு வீட்டின் தெரு வாயில் கதவும் எப்போதும் திறந்தபடியே கிடந்தது. இது தான் எல்லோரும் போற்றும் மகத்தான 'பொது நல யுகம்' என்றார்.

தத்துவஞானி பிளாட்டோ உருவாக்கியக் குடியரசை நடத்திக் காட்டிட மாவீரன் அலெக்சாண்டர் பயன்பட் டதைப்போல, கன்பூசியசும் தனது இலட்சிய பொது நல ராஜ்ஜியத்தை உருவாக்கிக் காட்டிட ஏதாவது ஓர் அரசன் இடைக்கமாட்டானா என்று ஆசைப்பட்டார்.

'ஓர் அரசாங்கத்தை எப்படி நடத்துவது என்ற அறிவு ஒருவனுக்கு வானகத்தால் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த அறிவைத் தங்களது மன்னன் முன்பு வைப்பது அவர்களின் கடமை' என்று கன்பூசியஸ் கூறினார்.

இந்த ஆசையால் அவர் எந்த அரசன் தன்னை ஒரு ஞான குருவாக ஏற்பான் என்று, அப்போதிருந்த ஒவ் வொரு சீன அரசுகளையும் நாடினார்! அங்கங்கே அரசியல் சூதுச்களும், சூழ்ச்சிகளும், போட்டிப் பொறாமைகளும், சுயநலங்களும், சுகபோகங்களும், பிறரை நம்பாமை எண் ணங்களும் அவருக்கு எதிராகக் கிளம்பின. அதனால் அவர் வகித்த பொறுப்புக்கள், சில பதவிகள் அனைத்தை யும் விட்டுவிட்டு ஊர் ஊராக ஓடினார்-நாடோடியைப் போல,

ஓடி ஓடி அலுத்துப்போன கன்பூசியஸ், 'இந்த உலகத்தைத் தம்மால் திருத்த முடியாது' என்ற விரக்தியால், மீண்டும் மாணவர்கள் பகுதியிலே ஞான குருவாகப் போதனையைச் செய்யத் துவங்கி விட்டார். இவ்வளவு மனவிரக்திக்குப் பிறகும் கூட, அவர் அரசியல் துறையைப் பற்றி என்ன கூறுகிறார் தெரியுமா!

ஒரு நல்ல ஆட்சிக்கு முக்கியமானவை மூன்று; ஏராள மான உணவு, போதுமான படைபலம்; பொதுமக்களின் ஒட்டுமொத்தமான நம்பிக்கை. இவற்றில் மக்களது நம் பிக்கைதான் உயிர்நாடி. அது இல்லாவிட்டால் அரசே நடவாது; இராது என்கிறார்.

ஒரு நாட்டை ஆள்பவன் பொருளாதாரப் பற்றாக் குறையைப் பற்றிக் கவலைப்பட வேண்டிய அவசியம் இல்லை. இருக்கும் அரசு வருவாய் பணம்; சரியாகப் பங்கிட்டு வழங்கப்பட்டிருக்கிறதா என்பதைத் தான் பார்ப் பான்! வறுமையை அவன் பொருட்படுத்த மாட்டான். அதன் நிலையற்றத் தன்மையைத்தான் பொருட்படுத்து வான்! சரியான பங்கீடு இருந்தால் வறுமை வராது; ஒற்றுமை உணர்விருந்தால் மக்களிடமிருந்தும் பற்றாக் குறைபற்றி புகார் வராது. உள்ளத் திருப்தி இருந்தால் புரட்சியே தோன்றாது என்று குறிப்பிடுகிறார்.

ஆட்சி செய்வோர் மக்களது நம்பிக்கையை இழந்து விடுவார்களானால்; அந்த ஆட்சியை மக்களே அகற்றி விரட்டிவிடுவார்கள்.

வானகத்து விதி முறைகளுக்கு ஏற்றவாறு மக்களின் பொது நலத்தை வளர்ப்பதுதான் ராஜ்ஜியத்தின் ஒரே நோக்கம். ராஜ்யம் என்பது, மக்களின் விவகாரமே தவிர, ஆள்வோர்களது பிரச்சினைகள் அல்ல!

எண்ணற்றத் தனித்தனியான குடும்பங்களுக்கு தலை போல் விளங்குவதே ராச்சியம் என்பது. அந்தக் குடும்பத்

தலைவர்கள் சமுதாய உரிமைகளின் பிரதிநிதிகளாகவே அரசாங்கத்தின் முன்பு தோன்றுவார்கள் என்றார்.

கன்பூசியஸ், அரசர்களையும், சிற்றரசர்களையும் ஆதரிப்பதால், அவரை முடியாட்சியின் முதுகெலும்பு என்று தவறுதலாகச் சிலர் எண்ணுகிறார்கள். அதுவன்று அவரது சிந்தனையின் முடிவு. அவர் அரசர்களின் ஆட்சிக்கு, ஆளும் சக்திக்கு மதிப்பளிக்கிறாரே-தவிர, அரசர்களை அவர் மதிப்பது இல்லை! மதித்திருந்தால் அவர் ஊர் ஊராக அலையும் நாட்டோடி வாழ்க்கை வாழ வேண்டிய அவசியம் ஏற்பட்டிருக்காது,

அது போலவே வேறு சிலர், கன்பூசியஸை பழமை வாதிகள் என்றும் கூறுகிறார்கள். அதுவும் உண்மையும் அன்று! மக்களின் முன்னேற்றம். நாகரீகத்தின் சரியான வழியில செல்வதையே அவர் விரும்புகிறார்!

அந்த நாட்டு மக்களை வழிநடத்திச் செல்லவும், அதற்கோர் எடுத்துக்காட்டாக செயலாற்றிக் காட்டவும்; நல்லதொரு ஆட்சியாளனும், அந்நாட்டுச் சட்டங்களை நிலை நிறுத்திட அதிகாரிகளும் தேவை என்கிறாரே தவிர முடியாட்சியை ஆதரிப்பது அல்ல அவரது நோக்கம்.

ஆட்சி புரிவோர் கேடர்களாக இருந்தால், பொது மக்களை வீணான தொல்லைகட்குள் ஆழ்த்திவிடுவார்கள் அதனால், ஆட்சியாளர்களைப் பயிற்றுவிக்கவும், ஆலோசனை கூறவும் பெருங்கவனம் செலுத்த வேண்டும். அதற்காக, அரசாங்கத்தையே ஒரு கல்விக் கோட்டமாக மாற்றி அமைக்கவும் கன்பூசியஸ் தயாரானார்.

அதனால் கன்பூசியஸ் மாபெரும் லட்சிய சோதனை செய்ய ஆரம்பித்தார். சமுதாய முன்னேற்றம் மற அரசியல் துறையையே அவர் முக்கியமாகவும், முதல் படியாகவும் சிந்தித்துச் செயல்பட்டார். என்றாலும்,

கல்வித்துறையை ஒரு திருக்கோயிலாக எண்ணிய அவர், அதன் வாயிலாக ஒரு மாபெரும் சாதனையை உருவாக்கி னார்! என்ன அந்த சாதனை?

## 3. சுயமாக சிந்திப்பதே அறிவு; தலைக்குள்ளே திணிப்பதல்ல!

ஞானி கன்பூசியஸ் பிறப்பதற்கு முன்பே சீனாவின் கல்வித்துறை மேன் மக்களின் மேற் பார்வையிலும், பணக் காரர் பரம்பரைகளின் பராமரிப்பிலும்தான் இருந்து வந்தது.

பொது மக்களுக்கோ, ஏழைகளுக்கோ, நடுத்தரக் குடி மகளுக்கோ கல்வித் துறைப் பிரிவுகளைக் கற்பித்திட தனிப்பட்ட ஆசிரியர்களோ அல்லது வேறு கல்வி நிலையங் களோ, தனியார் நிறுவனங்களோ, கன்பூசியஸ் வாழ்ந்த காலத்திலே இல்லை.

அந்த நிலையை முதன் முதல் சீன நாட்டில் மாற்றி அமைத்துக் கல்விப் புரட்சியைச் செய்தவர் கன்பூசியஸ்! எல்லா பொது மக்களும், ஏற்றத் தாழ்வற்ற முறையில் சாதி, பணம், உயர் பிறப்பு தகுதி போன்ற வித்தியாசங்கள் எல்லாம் இல்லாமல் சமத்துவமாகக் கல்வி கற்றிடும் முறையை அவர் உருவாக்கினார்!

பணம் என்பதல்ல எதைக் கொடுத்தாலும் கல்விக்குரிய கூலியாகப் பெற்றுக் கொண்டு கல்வியைப் போதிப்பார் கன்பூசியஸ்; ஆனால் கல்வி கற்கும் ஆர்வம் இல்லாதவர் களுக்கும், சிந்திக்கும் திராணியற்றவர்களுக்கும் என்ன கொடுத்தாலும், எவ்வளவு பணம் கொடுத்தாலும் அவர் பெறமாட்டார். கல்வியையும் கற்றுக் கொடுக்கச் சம்ம திக்க மாட்டார்.

கல்வித் துறையில் பிறப்பிற்கும், பணத்திற்கும் இடமில்லை என்று உலகத்தில் முதன் முதலாகக் கூறியவர் கன்பூசியஸ்தான்! அதுமட்டுமல்ல; அவரவர் தகுதிக்கும் திறனுக்கும்தான் முதல் இடம் என்று எவருக்கும் அஞ்சாமல் அவர் செயல்படுத்திக் காட்டிய உலகத்துமுதல் மனிதரும் கன்பூசியஸ்தான்!

எல்லா வகையிலும் சீர் கெட்டுச் சிதைந்துக் கிடந்த சீன நாட்டு மக்களின் ஏழைகள், நடுத்தரத்தினர் உட்பட்ட பொது மக்களில் பலர், கன்பூசியஸ் திட்டப்படி திறமையான வாலிபர்கள் தாழ்ந்த நிலையில் பிறந்திருந்தாலும், அவர்கள் பணமில்லாத ஏழைகளாக இருந்திருந்தாலும் தங்களது படிப்படியான முயற்சிகளால் மிகத் திறமையானக் கல்வியாளர்கள் ஆனார்கள் என்பது குறிப்பிடத்தக்கச் சம்பவமாகும்.

"ஒரு விஷயத்தில், ஒரு மூலையை நான் தெளிவாகச் சுட்டிக்காட்டிய பிறகு, மற்ற மூன்று மூலைகளையும் தானாகவே கண்டு பிடிக்க முடியாதவர்களுக்கு நான் மேலும் கல்வியைப் போதிக்க மாட்டேன்" என்று கூறியவரும் அவர்தான்!

ஆசிரியர் தன்மை அல்லது போதனாமுறை என்பது, படிக்கவரும் மாணவன் தலைக்குள்ளே அறிவுகளைத் திணிப்பதல்ல; அவன் சுயமாகச் சிந்திப்பதுதான் அறிவு என்று கல்வித்துறைக்கு அறிவுறுத்தியவரும் கன்பூசியஸ் தான்!

அறிவிற்குரிய வழிகளை ஆசிரியர்கள் கற்பிப்பர். ஆனால்; உனக்கு உண்மையிலே அது தெரியும் என்றால் தெரியும் என்று சொல்; தெரியாது என்றால் அது தெரியாது என்று சொல்லி, உனது அறியாமையை ஒப்புக் கொள்" இதுதான் அறிவுக்குரிய அடையாளம் என்று அறியாமைகளைப் பகிரங்கமாகத் தைரியமாக, செயல்படச் சொன்னவர் கன்பூசியஸ்!

"இன்றைய முற்போக்குக் கல்வி என்றும் உலகத்தவரால் கற்பிக்கப்படும் இருபத்தோராம் நூற்றாண்டைய கல்வி

முறை; அறிவை ஊட்டவும், வளர்க்கவும் உதவுகிறது. ஆனால், அது மனிதரின் மன அரங்கில் தோன்றக்கூடிய உணர்ச்சி பாவங்களை நெறிப்படுத்தி, பக்குவமடையச் செய்ய உதவுவது இல்லை' என்று பல அறிஞர் பெருமக்கள் இன்றையக் கல்வி முறையைப் பற்றிக் குறை கூறுகிறார்கள். சிலர் கண்டனக் குரலையும் எழுப்பிக்கொண்டே இருக்கிறார்கள்.

சமூகத்தில் உள்ள ஒவ்வொரு தனிமனிதனும் சமுதாயத்தில் பயனுள்ள அங்கத்தினனாக வாழ்வதற்குத் தேவையான மனப்பக்குவம், அறிவு, வளர்ச்சியை ஊட்டும் வகையில் கல்வி முறையை முதன்முதலில், உலகத்தில், சீனநாட்டில், வகுத்துக் காட்டிய வல்லமை, பெருமை, மாபெரும் ஞானியான கன்பூசியசுக்கே உரியதாகும்.

கன்பூசியஸ் உருவாக்கிய கல்வி முறை, உலக வாழ்வின் போக்கிலே மனிதன் எந்தச் சூழ்நிலையையும் எளிதில் சமாளித்து, மனப்பக்குவத்தை வளர்க்கும் வகையிலும் உருவாக்கப்பட்டதாகும்.

ஒருவன் தன்னையே தான் உணர்ந்து, தனது சமுதாயத்தில் தானும் ஓர் அங்கமாகி, அன்போடும், பண்போடும் அருளோடும், அறநெறிகளோடும் வாழ்ந்து, இயற்கையோடு இன்பம் பெறும் அற்புதமான வழியையும் கன்பூசியசின் கல்வித் திட்டம் மக்களுக்குக் கற்பிக்கின்றது.

'அறிவுக்காக அறிவை அடைவதைவிட, தன்னைப் பண்படுத்தி வளர்ப்பதற்காக அறிவைப் பெறுவதுதான் கல்வியின் உண்மையான பயன்' என்று கன்பூசியஸ் தனி மனிதனை வற்புறுத்துகிறார்.

சிந்தனை இல்லாத படிப்பு சிறக்காது; வீணானது; படிப்பு இல்லாத சிந்தனை பாழானது; ஆபத்தானது! என்று நம்மை அவர் எச்சரிக்கின்றார்.

நன்மை எது என்று தேர்வு செய்து, உலகுக்கு நல்லதையே செய்து, தங்களையும் அதே நேரத்தில் வளர்த்துக் கொண்டு, மனித இனத்தை வளப்படுத்திட கல்விதான் மூலகாரணமாகும் என்றார்!

எல்லாருக்கும் கல்வி கற்பிக்கும் கன்பூசியசின் பொது மக்கள் கல்வித் திட்டத்தின் நோக்கம் இதுதான். இதன் சாரம் என்னவென்றால், தன்னையும் தன் இனத்திற்குரிய கடமைகளையும் அறியக் கூடிய கல்வி முறைதான் அது என்கிறார்.

கன்பூசியஸ் கல்வி திட்டத்தின்படி, அறநூல்களும், கலைகளும் மிக முக்கியமானவை. கலைகள் என்பதில் ஆசாரங்கள் இன்னிசை, கவிதை இந்த மூன்றும் அடிப்படையானவை, ஆசாரங்கள் மனிதனின் மனதை ஒரே அளவாக இயங்க வைத்து, ஆசைகளை நிர்வகிக்கிறது; இதை நாகரிகப்படுத்தும் சக்தியாக விளங்குகிறது; மனிதனின் உணர்ச்சி பாவங்களை ஒழுங்கு படுத்துகிறது, இச்சையாதிகளைக் கட்டுப்படுத்துகிறது.

கவிதை, ஒழுக்கச் சக்தியாக விளங்கி, நமது குணத்தை நிதானப்படுத்தி, அறவுணர்ச்சிகளைத் தூண்டுகிறது. இவ்வாறு கன்பூசியஸ் நினைத்து இந்தக் கருத்துக்களைக் கூறினார்.

★ நமது குணம், கவிதையால் பண்படுத்தப்பட்டு, ஆசாரங்களால் நிலை நிறுத்தப்பட்டு, இசையால் பக்குவப் படுகிறது.

★ கவிதை எழுதும் பயிற்சி இல்லாமல் ஒருவன் சொல்லாட்சிகளை ஒழுங்காக, நிறைவாகச் செய்ய முடியாது.

★ பண்டையக்கால இலக்கியங்களும் அரசியலும், இவற்றோடு வேதம், சரித்திரம் முதலானவற்றையும் மேற்கண்ட கலைகளோடு சேர்த்து கன்பூசியஸ் தனது மாணவர்களுக்குப் பயிற்சிக் கொடுத்தார்.

★ மனப்பண்பு, வாழ்க்கை இயல், ஆட்சியியல் இவை பற்றி அவர் தனது மாணவர்களுக்கு அடிக்கடி கற்பித்து வந்தார்!

★ பழங்கால ஆசாரங்கள், பழக்க வழக்கங்களைத் தேடி அறிவதிலும், புனிதமான திருமறைகளைப் படித் துணர்வதிலும், அவர் தீவிரமான அக்கறைச் செலுத்தி னார்.

காரணம் என்னவென்றால், பொருள்களின் உருவங் களை எதிரொலிப்பதற்கு நிலக் கண்ணாடியை நாம் பயன் படுத்துவது போல, நிகழ்காலத்தைப் புரிந்து கொள்வதற்கு பழைய காலத்தை நாம் கற்க வேண்டியவர்களாக இருக் கிறோம் என்று கூறுகிறார் கன்பூசியஸ்!

சீன மக்களின் தேசியப்பொதுவாழ்விற்கும் கன்பூசியஸ் செய்த தொண்டு என்ன தெரியுமா?

சமூகத்தில் ஒருவன் தன்னை நிலை நிறுத்திக் கொள் வதற்கு என்ன செய்வான்? தனது முன்னோர்களையும், குடும்பப் பரம்பரையின் பெருமைகளையும் எடுத்துக் காட்டுவான்!

அதுபோல, நிகழ்காலத்தின் கவனத்தைக் கவர்வதற் காகக் கடந்தக் காலத்தையும் எடுத்துக்காட்டுவது மரபு. பரம்பரையாக மதிக்கப்பட்டு வந்துள்ள ஒரு பழமைக் கருத்தை அடிப்படையாகக் கொண்டு, அதன்மீது ஒரு புது நடத்தைகளை உருவாக்கி எழுப்புவது சிறந்த ஒரு வழியாகும்.

அதனால்தான் சீன ஞானி கன்பூசியஸ், பழைய திருமறைகளையும், ஆசாரங்களையும் பதிப்பிக்கும் திருப்பணியில் இறக்கினார். அவற்றிலிருந்து அவர் தேர்ந்தெடுத்தக் கொள்கைகள் பழங்காலத்தது என்ற காரணத்தால், அதற்குத் தனிப் பெருமையும், சக்தியும் ஏற்பட்டிருந்தன.

அந்த நூல்களைக் கன்பூசியஸ் பொது மக்களின் அறிவிற்கும் கவனப் பார்வைக்கும் கொண்டு வந்தார். இந்த சிறந்த தொன்மைச் சீனர்களின் தேசியப் பொது வாழ்விற்கு நடைமுறை விதிகளாக்கினார்.

கன்பூசியசுக்கு ஒருவன் தண்டனை பெறுவதில் நம்பிக்கை இல்லை; நல்ல பண்புக்கு அவன் வழி நடத்துவது ஒன்றுதான் உண்மையான அறிவு என்பது அவரது கருத்தாகும்.

மனிதன் இயற்கையிலேயே நல்லவன்; அதனால் அவனைத் தண்டனையோடு நெருங்குவது அறிவில்லாத செயல். அது மட்டுமல்ல; தண்டனை தருவதால் மக்கள் வளர மாட்டார்கள். அவர்கள் வளமாக வாழ வேண்டுமானால், சட்டங்கள்தான் அவர்களுக்கு வழி காட்ட வேண்டும்.

சில நன்மைகளையும், தீமைகளையும் பகுத்துணர்வதற்குச் சட்டங்களின் பயிற்சியையும், உதவியையும் அளிக்க வேண்டும்.

தண்டனைகள் மூலமாகவோ, பலாத்காரத்தின் மூலமாகவோ, சிலவற்றை மனிதர்கள் செய்யும்படி வைக்க முடியும் ஆனாலும், இவை கல்வியின் பயன்பாட்டிற்கு சமாகாது-புத்துணர்வாகாது.

சட்ட திட்டங்கள், தண்டனைகள் மூலமாக மக்களைக் கட்டுப்படுத்திட அல்லது திருத்திட முயன்றால், மக்கள்

அவற்றிலே இருந்து எப்போதும் ...பித்துக் கொள்ளவே முயல்வார்கள்.

ஆனால், அ... மக்களிடம், சீலம், நேர்மை, ஆகிய வற்றால் ...ர்கள் வாழ்க்கையைக் கட்டுப்படுத்தப்படும் உ..., அதனால் தங்களையே திருத்திக் கொள்வதற்கான வாய்ப்பு அவர்களுக்கு உண்டாகி விடுகிறது.

எனவே, ஒருவன் தனது அறிவின் ஒளியைப் பயன் படுத்தவும், பொருள்களின் தன்மையை உட்புகுந்து நோக்கவும், ஒவ்வொரு மனிதனும் முயல வேண்டும்.

தன்னைப் பண்படுத்திப் பக்குவமடைவதற்கும், தன் குடும்பம், தன் தட்டாரம் முதலியன சிறப்படைவதற்கும், ஒவ்வொருவனும் கடினமாகப் பணியாற்றிட வேண்டும். இதன் வாயிலாக ஓர் உலகப் பொது ஒழுங்கை உருவாக்கு வதில் அவன் பங்கு கொள்கிறவன் ஆவான்.

அன்பு, அருள், நேர்மை இந்த மூன்றும் ஒரு தனி மனிதனின் உள்ளத்தில் பதிந்து இருந்தால், அந்த தத்துவ ஒளிகள் அவனது செயல்களில் நிச்சயமாக எதிரொலிக்கும்! அப்படிப்பட்டவர்கள் நிறைந்த ஒரு குடும்பத்தில் அமைதி யும், திருப்தியும் நிறைந்திருக்கும்.

வீடுதோறும் இந்த நினைவு நில. இயற்கையோடு இருந்தால், நாடுதோறும் ஓர் ஒழுங்குமுறை இருக்கும். நாடுதோறும் ஓர் ஒழுங்குமுறை படர்ந்தால் உலகமெங்கும் அமைதியும், ஆனந்தமும் ஏற்படும்-எக்களிக்கும்.

அப்போது, வானகமும், வையகமும் ஓர் ஒழுங்கில் இயங்கி, ஒவ்வொரு மனிதனும் இயற்கையோடு இணைந்து இன்பம் பெறுவான், என்று மகான் கன்பூசியஸ் தனது ஞான மார்க்கச் சிந்தனையிலே தெளிவு படுத்தியுள்ளார்.

இத்தகைய ஒரு ஞான செல்வரிடம் கல்வி பயின்றிட சீன நாட்டின் எல்லை முனைகளிலே இருந்தகனால் மாண வர்கள் அணியணியாகத் திரண்டு வந்து கல்வியைக் கற் றார்கள். சீனாவின் பல பகுதிகளில் இருந்தும் அவர்கள் வந்து குவிந்தார்கள். இவ்வளவு பெரிய மாணவர்களது குழுக்களை அழைத்துக்கொண்டு, கான்பூசியஸ் மகான் நடமாடும் ஒரு ஞான போதியாகவே முழுவதுமாகச் சுற்றிச் சுற்றி வந்தார்.

சீடர்கள் அவ்வாறு அவர் பின்னால் தொடர்ந்து வந்து கொண்டிருந்தபோது, திடீரென ஒரு மாணவன் இறந்து விட்டான். அதைக் கண்ட கன்பூசியஸ் துக்கம் தாங்காமல் கதறியும் விம்மியும் கண்ணீர் விட்டு ஓவென்று அழுது அப்படியே மெய்மறந்து அமர்ந்து விட்டார்.

இவ்வளவு மாணவ மணிகளையும் அணியணியாக சேர்த்து ஏன் குருகுல வாழ்வை கன்பூசியஸ் நடத்தி வந்தார்? குருவினுடைய கொள்கைகளை, மாணவர்கள் அணியினர் அனைவரும் ஒவ்வொரு வராகச் சென்று மக்க ளிடையே அவற்றை எடுத்துக்கூறி மக்களைத் திருத்துவார் கள் என்ற நம்பிக்கைதான் மூலக் காரணமாகும்.

கன்பூசியஸ் என்ற மாபெரும் ஞானியின் பின்னால் நாட்டை வலம் வந்தவர்கள் சாமான்யர்கள் அல்லர்! இலக்கிய மேதைகள், வரலாற்று வித்தகர்கள், வேத விற் பன்னர்கள்; அரசியல் அறிஞர்கள்; அறிவொளி பரப்பும் ஆசான் பெருமக்கள், தத்துவ ஞானிகள் செல்வாக்குப் படைத்த செல்வர்கள் போன்றவர்கள் ஆவர் அவர்கள் எல்லாம் கன்பூசியஸ் மகானின் குருகுலத்தில் ஞானப் போதனை பெற்றவர்களாவர். இவர்கள் அனைவரும் அவரவர் பகுதிகளுக்குச் சென்று கன்பூசியஸ் ஞானத்தைப் போதித்த பரம்பரையாகத் திகழ்ந்தார்கள்.

சீனாவின் தேசிய பண்பாட்டை கன்பூசியஸ் தனது மாணவர்கள் மூலமாக, கல்வி என்பது சுயமாக சிந்திப்பது என்ற அறிவு வேட்கையால், பல நூற்றாண்டுகளில் பல அரசுகள் ஆற்ற வேண்டிய அறிவு, சமுதாயம், ஆன்மீகம், அரசியல் பணிகளை அந்த மாணவர் பாசறை செய்தது!

## 4. உலகம் போற்றும் 'ஜீன்' தத்துவ அற்புதங்கள்

பேரறிவாளன் கன்பூசியஸின் ஞான போதனைகளில் மிகச் சிறந்தது எது என்று இன்றுவரை உலகம் போற்றிக் கொண்டிருக்கும் தத்துவங்களில் தலை சிறந்தது 'ஜீன்' தத்துவ அற்புதங்களாகும்!

'ஜீன்' என்றால் என்ன பொருள்? அதாவது மனித உள்ளம் படைத்திருத்தல், பிறன் மீது அன்பு செலுத்து தல் என்பதே அதன் உட்பொருளாகும்!

கன்பூசியஸ், சீன நாடெங்கும் பேசி வலம் வந்த அற நெறிகள், அரசியல் நெறிகள், சமுதாய உணர்வுகள், லட்சியக் கருத்துக்களில்; எல்லாவற்றுக்கும் மேலாக, தலைசிறந்த மூலாதாரமான கொள்கையாக விளங்கி நிற்பது இந்த ஜீன் கொள்கைதான்! இதிலே இருந்துதான் அவரது மற்ற கொள்கைகள் எல்லாம் தோன்றின என்றும் கூடச் சொல்லலாம்!

மனிதத் தன்மையை வளப்படுத்தி, மனித இயல்பு களை வளர்த்து, தனது குணவடிவத்தை உயர்வுபடுத்தி, மனிதனது உரிமைகளை நிலைநாட்டுவது இந்த 'ஜீன்' தத்துவங்களே ஆகும்! இந்த தத்துவத்தின் பரிபூரண பண்பையே எல்லா பண்புகளுக்கும், மனித உறவுகளுக்கும் அடிப்படையாக அவர் அமைத்துள்ளார்!

ஜென் கொள்கையின் பெற்றோர் பக்தி, சகோதர அன்பு என்னும் கன்பூசியசின் இரு கருத்துக்களையும் ஆராய்ந்தார்; அவற்றின் விரிவுக் கருத்துக்கள் முழுமையாக விளங்கும்.

வீட்டில் இருக்கும்போது ஒரு வாலிபன் பெற்றோர் பக்தியோடும், வெளியே பழகும்போது அதே வாலிபன் மற்றவர்களிடம் உடன்பிறந்த சகோதரப் பக்தியோடும் பழகப் பயில வேண்டும்.

மனப்பூர்வமாக அவன் எல்லோரையும் நேசிக்க வேண்டும் என்று கூறிய கன்பூசியஸ்; இந்த இரண்டு பண்புகளையும், மனித உணர்வுகளையும் சமுதாய அமைப்பிற்கு அடிப்படையாக இருக்கவேண்டும் என்று விளக்குகிறார்.

அதே சமயத்தில் அந்த வாலிபனுக்கு விசுவாசமும், பரோபகாரமும் தேவை என்கிறார். விசுவாசம் அவனுக்கு பிறரிடம் முழுமனதுடனான நேர்மையினையும், பரோபகாரம் வெளியுலகில் மற்றவர்களை நன்கு புரிந்து கொள்ளும் மனோநிலையினையும் அவனுக்கு உருவாக்கும் என்கிறார்.

'ஜென் வழி மனிதன் தன்னை வளர்த்துக் கொள்ளும் போது, அவன் மற்றவர்களையும் வளர்க்கும் மனநிலையை பெறுவான் என்றும், அந்தக் கொள்கையுடையவன் நல்ல குடிமகனாகவும், நல்ல அட்சியாளனாகவும், நல்ல தந்தையாகவும், நல்ல தாயாகவும், நல்ல பிள்ளையாகவும், நல்ல கணவனாகவும் நடந்து கொள்ளும் நல்ல பழக்கங்களையும் பெறுவான் என்று கூறுகிறார்.

இப்படிப்பட்ட ஜென் ஒழுக்கங்கள், சீனர்களின் பண்பாட்டை வளர்ப்பதற்கும், தேசிய வாழ்க்கைக்கும், மூலாதாரமாக மாறின. நீதி, நேர்மை, பொறுமை, மற்றவர்

களோடு பழகும் உறவுமுறை, அன்பு, ஆகியவற்றை ஒரு வருக்கு ஒருவர் பரிமாறிக் கொள்ளவும் உதவுகின்ற மன நிலைகளை வழங்குகின்றன. இதனால், இந்த ஜீன் தத்துவத்தின் போதனைகள் உலகெங்கும் தலைதூக்கி நின்று மக்களின் போற்றுதலைப் பெற்றுள்ளன என லாம்.

கன்பூசியஸ் இந்த தத்துவங்களின் அருமையை நன்கு புரிந்துகொண்டதால்தான், இவற்றைத் திருப்பத் திரும்ப உலகுக்கு உபதேசம் செய்தார். ஒருவன் தன்னுடைய சுற்றுச் சார்பு நிலைகளுக்கு உகந்தவாறு அவன் தனது செயல்களை உருவாக்கிக் கொள்ள வேண்டும் என்று வற் புறுத்தி வலியுறுத்துகிறார்.

மனிதன் உயிர்கள் மீது அன்பு காட்டுவது மனிதப் பண்பு; ஆனால், மனிதர்களைப் புரிந்து கொள்வது அறிவியல் என்றும் தீர்க்க தரிசனமாகக் கூறுகிறார்.

மனிதனுக்கும்-ஓர் அரசுக்கும், இவை அனைத்திற்கும் மேலே ஒரு சக்தி உள்ளது. அதுதான் சுவர்க்கம் அல்லது வானகம் என்றும் சொல்கிறார்.

வானகம் என்று அவர் கூறுகிறாரே; அது என்ன என்ற கேள்வியை எழுப்பி, அதற்கு அவரே பதிலளிக்கும்போது; 'வானகம் என்பது உன்னதமான ஓர் ஆத்மீக இயக்கம். அது இயற்கையின் சக்தியே தவிர, இறைவன் எனப்படும் ஓர் ஆளல்ல' என்றும் அதைத்தெளிவுபடுத்தி அடையாளம் காட்டுகின்றார்.

'வானகம்', ஒளியை வழங்குகிறது. அதனைப்போல ஒளியூட்டும் லட்சியங்கள்-நம்மை, நமது பனத்தைப் புதுப் பிக்கவும், மனித சமுதாயம் முழுவதும் அந்த ஒளியால் சிறப்பான நன்மைகளைப் பெறவும் உதவுகின்றது என்றும் அந்த ஞானி அறிவிக்கின்றார்.

இவ்வாறு, வானகம் தரும் ஒளியை இயற்கை நியதி என்கிறோம். இந்த இயற்கையின் வழிதான் நமது கடமையின் வழியாகும் என்று கன்பூசியஸ் விளக்குகின்ற உண்மை, மனித இன ஒழுக்கத்திற்குரிய மூலஸ்தானம் என்றும் குறிப்பிடுகிறார்.

நமது கடமை என்பது, வெளியிலே இருந்து வரும் கட்டளைகளோடோ, தடைகளோடோ சம்பந்தப்பட்டவை அல்ல. நமது உயிர்க்குள் இருக்கும் இயற்கையான பகுத்தறிவைப் பிறவியிலேயே நமக்கு அளிக்கப்பட்டிருக்கும் அந்தத் தெய்வீக ஒளியை வளர்ப்பதும், நாம் நமது ஒழுங்கு கெட்டுப் போகாமல், நம்மைச் சுற்றியுள்ள இயற்கையின் தன்மைகளோடு இணைந்து, இசைந்து இயங்கும் தன்மையை அடைவதும் மனிதர்களுடைய கடமையாகும்.

'பரிபூரணம் என்பது வானகத்தின் சட்டம். பரிபூரணம் அடைதல் என்பது மானிடத்தின் சட்டம்! இவ்வாறு, மனித நடத்தைக்கும், மாபெரும் உலகத் திட்டத்திற்கும் ஓர் இணைப்பை ஏற்படுத்தியுள்ளார்.

பொது உலகப் போக்கோடு மனிதனின் செயல்களும், நடத்தைகளும் ஒன்றுபட்டிருக்க வேண்டும். ஒன்றுபட்டிருக்க முடியும். அப்போதுதான், மனித ஒழுக்கம் உண்மையான, கண்கண்ட நடத்தையாக இருக்கும் என்கிறார்.

நமது தெய்வீக ஒளி பொருளாதார உணர்ச்சி என்ற இருளில் மூழ்கிவிட்டது ஆனால், அந்த ஒளி மங்கி விட்டதே தவிர முழுவதுமாக அணைந்து விடவில்லை; என்றும் விளக்கமளித்துள்ளார். உலகப் பொது ஒழுக்கமும் உலக ஒழுக்க அறிவும் கன்பூசியஸ் சிந்தனையில் நிலையாக இடம் பெற்றுள்ளதை இங்கே பார்க்கின்றோம்.

இயற்கையோடு மனிதன் ஒன்றி வாழவேண்டும். பருவகாலச் சூழ்நிலைகளுக்கு ஏற்றவாறு அவன் தனது செயல்களையும், அதற்குரிய போக்குகளையும் அமைத்துக் கொண்டு, தெய்வீகச் சட்டத்தின் ஒளிக்கு ஏற்றவாறு உண்மையான பாதையைக் கண்டு நடக்க வேண்டும் என்பதே அவரது எண்ணமாகும்.

மேலே உள்ள வானகம் என்பது இயற்கையின் சக்தி; ஒழுக்கச் சக்தி, இரண்டும் இணைந்த ஒரு சக்தியாகும். அந்தச் சக்திகளிடம் இருந்துதான் மனிதனுக்குரிய நன்மையும்-தீமையும் வருகின்றன.

மனிதன் உயிர் வாழும்போது, இயற்கையும்-வாழ்க்கையும் இரண்டும் இணைந்ததாகும். அவை ஒன்றில் ஒன்று இணைந்தவை. எனவே, மனிதனையும், வானகத்தையும் ஒன்றுபடுத்தும் இந்த லட்சியம் கன்பூசியசின் மகத்தான ஒரு சிந்தனையாகும்.

ஒரு சத்திய நெறியின் கட்டளைக்குள் மனித ஒழுக்கங்களை ஒழுங்கு படுத்துவது; ஒரே அறநெறியின் கட்டளைக்குள் மனிதர்கள் அனைவரையும் பொறுப்புள்ளவர்கள் ஆக்குவது இந்தக் கன்பூசியசின் கொள்கைகளோடு தற்காலச் சமுதாயத் திட்டக் கொள்கைகளையும் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டியது ஒரு அவசியமாகும்.

எல்லா மனிதர்களையும் வானகத்தின் முன்பு; பொது மனித சமுதாயக் கூட்டமாகக் கொண்டு வந்து கன்பூசியஸ் நிறுத்துகிறார். மக்களின் தன்மைகளையும், சக்திகளையும் பக்குவமான ஒரு திசையை நோக்கிப் பண்படுத்தி வளர்ப்பதற்கான வழிகளை அவர் வகுத்துள்ளார். முறையான ஓர் உலக ஒழுங்கிற்கு மனிதர்களைப் பாதுகாவலராக்கி, மக்கள் கடமைகளையும், பொறுப்புக்களையும் அவர் கவனப்படுத்துகிறார்.

இயற்கையைப் பற்றிய இன்றைய மேனாட்டுச் சிந்தனையாளர்களின் கருத்துக்கும், கன்பூசியசின் சிந்தனைக்கும் இடையே பெருத்த ஒரு வித்தியாசம் இருப்பதை நாம் காணலாம்.

வானகத்து விண்மீன்கள், கோள்கள் போன்ற இயற்கையின் அற்புதங்களைக் கண்டு வியக்கும் மேனாட்டுத்தத்துவ ஞானிகள் கூட, நமக்கு மேலே உள்ள வானக சக்திக்கும், மனிதர்களுக்குள்ளே உள்ள ஒழுக்க நெறிகளுக்கும் இன்று வரை சம்பந்தப்படுத்தியே பார்க்கவில்லை.

வானகத்துச் சக்தியும், மனித ஒழுக்க நெறிகளின் சக்தியும் ஒன்றோடு ஒன்று இசைந்து போகும் நோக்கு உள்ளவை என்று கன்பூசியஸ் சிந்தனை செய்து கூறி உள்ளார்.

'மனித தத்துவமும், வானகமும் ஒன்று சேர்ந்துதான், இந்த உலகத்தை இயக்குகின்றது. இதில் மனிதன் ஒரு முக்கியமான உறுப்பினன் ஆவான். இந்த இரு சக்திகளும் இணைந்து இயங்க வேண்டியவை. இந்த இணைப்பில் மனிதத்துவம்தான், சகலவிதமான இயற்கை அழிவுகளுக்கும் காரணமாக இருக்கின்றது அதனால், இயற்கை நியதியை ஒரு நிலையான, சீரான, ஒழுங்கு நிலையில் காத்து வருவது மனிதனின் கடமையாகின்றது' என்கிறார் கன்பூசியஸ்;

ஒழுக்க ரீதியாகவும், மண், விண், காற்று, வான், நீர் என்ற ஐம்பூதங்கள் இயக்கத்தின் படியும், ஒரு விளைவை உண்டாக்கிட வானகத்திற்கு வழிவகைகள் உண்டு. உலக இயக்கத்தின் இயல்பான இந்த அறநெறிகள் வெளிப்படையாக, உடனே தெரியாமல் இருக்கலாம்.

ஆனால், ஒவ்வொன்றின் வீழ்ச்சிக்கும், வளர்ச்சிக்கும் உரிய மூலாம்சங்கள், அதனதன் உள்ளே அடங்கி இருக்கின்றன என்பதுதான் உண்மை.

எடுத்துக்காட்டாக, போசமான ஓர் அரசாங்கம், அதன் வீழ்ச்சிக்குரிய கிருமிகளைத் தன்னிடமே சுமந்து கொண்டிருக்கின்றது. அது போலவே, ஒரு நல்ல அரசாங்கம் வளர்ந்தோங்குகின்றது. என்பதும் உலக வரலாறு நிரூபித்துக் காட்டிய உண்மைகளாகும்.

வானகத்தின் சட்டங்களுக்கும், பூமியின் நீதிக்கும் ஏற்ப வீழ்ச்சியும், எழுச்சியும் உலக வாழ்வில் அவ்வப் போது தோன்றுகின்றன.

தவறுகள் ஏற்படும் போது உலகியல் திட்டமும் தடம் புரளும்; வானகத்து நெறிக்கு மாறாக உலகில் அநீதிகள் ஏற்படும்போது, யுத்தங்களும், பூகம்பங்களும், வெள்ளமும் கொந்தளிப்பும், கொள்ளை நோய் போன்ற பேரழிவுகளும் சீரழிவுகளும் ஏற்படும் என்கிறார்.

எனவே, இயற்கை நெறியும், மனிதநெறியும் வெவ் வேறானவை அல்ல; ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டவை தான். இந்தத் தத்துவம் மனித சிந்தனைக்கு இன்றும் அவசியமானதாகவே இருக்கிறது.

ஒரு தனி ஜடப்பொருளின் இயக்கமாக இயற்கையைக் கருதும் இன்றைய விஞ்ஞானச் சிந்தனை, இயற்கையை மீறும்படியான விஞ்ஞான அறிவை மனிதனிடம் வளர்த்து விடுகின்றதே தவிர, இயற்கை நிகழ்ச்சிகளின் போக்கை யும், உலகியல் சம்பவங்களையும் பொருளற்றதாக்கி, மனி தனை அவற்றிற்கு சக்தியற்றவனாக்கி வெறும் ஜடப் பொருளாக்கி விடுகின்றது.

அதற்கு மாறாக, மனிதர்களாகிய நம்முடைய செயல் கள் அனைத்திற்கும்-உலக நிகழ்ச்சிகளுக்கும் சம்பந்தம் உண்டு என்று கூறுகின்ற கன்பூசியஸ் தத்துவம், அதீதமான ஓர் ஆத்மீகச் சக்தியையும் நமக்கு வழங்குகின்றது.

இயற்கையையும் தம் வசப்படுத்தக் கூடிய ஓர் ஆத்மீக சக்தி நம்மிடம் இருக்கின்றது என்ற உணர்வைத் தூண்டி, மனித சக்தியை மிக மிக உன்னத நிலைக்கு உயர்த்தி விடுகின்றது.

வானகத்தின் விதிகளில் இருந்து மனிதனில் வித பிரிந்து நிற்க முடியாது. இந்த நியதிக்கு மாறாகச் செல் லும் போதுதான், உலகத்திற்குப் பேரழிவும், பெருந் துன் பங்களும் உண்டாகின்றன.

பயங்கரச் சம்பவங்கள், துயரங்கள் துன்பங்கள், துர்ப் பாக்கியங்கள் எல்லாம் துன்புறும் உலகின் எச்சரிக்கைக் குரல்களே ஆகும். ஒழுங்கை மீட்க வேண்டும் என்றும், சரியான பாதைக்குத் திரும்பிட வேண்டுமென்றும், மனி தனை அவை அறைகூவி அழைக்கின்றன

மக்களின் பொதுநல வழியில் எதுவும் தடையாக நிற்காமல் காப்பதுதான் ஞானமகான் கன்பூசியசின் தத்து வக் கவசம். இந்த வகையில் பார்த்தால், அவர் மக்களின் அன்பராக, ஒரு புதுமையான ஜனநாயகவாதியாகவும் திகழ்கின்றார்.

உலகம் முழுதும் உள்ள மனிதன், சகமனிதன் ஆகி யோர் பெறவேண்டிய உறவு பற்றிய இவருடைய ஞானம், அன்பு வழியே, அறநெறிகள் படியே உலக மனித சமு தாயம் அமைய வேண்டும், என்ற கன்பூசியஸ் கருத்தும், மனிதனும் இயற்கையும் ஒன்றுபட்டு இயங்க வேண்டும் என்ற அந்த மகானின் சிந்தனையும் அரசியல் தத்துவத் திற்குக் கிடைத்த பெரும் பேறுகளாகும்.

## 5. ஞானி கன்பூசியஸ் வாழ்க்கை வரலாறு

சீன நாட்டின் மாபெரும் ஞானி மட்டுமல்ல; உலகம் முழுவதும் போற்றிக் கொண்டாடப்படும் பொதுவான ஒரு தத்துவ ஞானி கன்பூசியஸ்.

ஞானி என்றால், ஏதோ முற்றும் துறந்து, உலகியலை உதறி, இல்லற வாழ்க்கை விட்டு ஒதுங்கி வன வனாந்திரங் களைச் சுற்றிக்கொண்டு, காயோ கனியோ, கந்த மூலமோ, புற்றோ, புதரோ, கட்டாந்தரையோ என்று உண்டு உறங்கி, ஆடைகளற்று அல்லது அம்மணமாய் திரிந்து, போகியாக இருந்தவன் யோகியாக மாறி வர்களுக்கு உப தேசம் புரியும் புராணக் காலத்துப் பரமார்த்திக சந்நியாசி யாகி, 'காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா' என்று பாடித்திரிந்த ஞானி என்ற பெயரை பெற்றுக் கொண்டவர் அல்லர் கன்பூசியஸ்.

உலகுக்கு அறம் போதித்த திருவள்ளுவர் பெருமா னைப் போல, நல்லறமே இல்லறம்; பெண்ணின் பெருந் தக்க யாவுள? மங்கலம் என்ப மனைமாட்சி, உலகுக்கு வாழ்வறம் வகுத்து, மக்களோடு மக்களாய் மாண்புடன் வாழ்ந்து, நடை முறை வாழ்வுக்கு அரசியல் ஞானம் போதித்து, சாதாரண ஏழை மக்களும் பின்பற்றக் கூடிய கர்ம மார்க்கத் தொண்டுகளாற்றி நானும் ஒரு மனிதன் தான் என்று வாழ்ந்துகாட்டிய ஞானி கன்பூசியஸ்!

கன்பூசியஸ் சீன நாட்டு மக்களுக்குக் கூறிய நல்லறங் களை, அந்த நாட்டு மக்கள் ஏதோ ஒரு மத போதனை போல பயபக்தியோடு ஏற்றுக் கொண்டார்கள் என்றாலும், அவர் மதவாதி அல்லர்; மதத்தை உருவாக்கிய மாபெரும் மகானும் அல்லர்!

கன்பூசியஸ் அறநெறிகள்-சீன மக்களை நல்வழி நடத் திச் செல்லும் ஞானோபதேசங்களாக இருந்தன! அதனால்

தான் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகியும், இன்றும் அவர் சீனநாட்டு மக்களது நெஞ்சங்களிலே பக்தியுலாவாகப் பவனி வருகிறார் என்பவற்றுக்கு அடையாளமாக இன்றும் எண்ணற்ற திருக்கோயில்கள் கன்பூசியஸ் மகான் பெயரால் இருக்கின்றன.

இவ்வளவுக்கும் அவர், மதத்தைப் பற்றியும், மதத்தின் தலைவனான கடவுளைப் பற்றியும் மக்களுக்குப் போதித்த வர் அல்லர்; தனி மதம் எதையும் நிறுவியவரும் அல்லர்; மனிதன் என்பவன் பிறப்பதற்கு முன்பு எங்கிருந்து வந் தான், இறந்த பிறகு எங்கே போகிறது அவன் ஆவி என் றெல்லாம் ஆராய்ச்சி செய்து அவுற்கு மோட்சமா-நரகமா? என்ற கற்பனைகளை எழுப்பி மக்களைப் பயமுறுத்திய வரும் அல்லர்- பலவீனப் படுத்தியவரும் அல்லர்; என்றா லும், அவருக்கு சீனா நாட்டிலே திருக்கோயில்கள் இன்றும் உள்ளன!

அந்த மகானுடைய மாணவன் ஒருவன் அவரிடம் மரணத்தைப் பற்றிய விவரம் கேட்டபோது; "வாழ்க்கை யைப் பற்றியே ஒன்றும் அறியாத உனக்கு மரணத்தைப் பற்றி நீ என்ன தெரிந்து கொள்ள முடியும்? என்று அவனை திருப்பி விடை மூலம் வினா கேட்ட விந்தைமிகு ஞானி கன்பூசியஸ்.

இந்த பேரறிஞனை, சீன மக்கள் மகான்களில் மகான், ஞானக் களஞ்சியத்தின் வைரமணி என்றெல்லாம் இன்றும் பயபக்தியுடன் அவரைப் புகழ்ந்தாலும், அந்த ஞானிகளின் தலைவனான கன்பூசியஸ், மக்களை வியப்பில் ஆழ்த்தும் எந்த அற்புதங்களையும் உலகுக்கு செய்து காட்டியதால் புகழ் பெற்றவர் அல்லர்! அதனால், ஒரு கூட்டத்தையும் தன்பின்னால் சேர்த்துக் கொண்டு இயங்கியவரல்லர்!

அற்புதங்கள்; ஆற்றல் காட்டும் வீரதீரச் செயல்கள், மாபெரும் கிளர்ச்சிகள், மகா ஞானிகள் பற்றியன எல்லாம்

என்னிடம் யாரும், எதுவும் கேட்கக் கூடாது என்று அவர் உயிருடன் நாட்டில் ஞான உலா வந்தபோது கேள்வி கேட்டவர்களை எல்லாம் திட்டவட்டமாகக் கண்டித்தது மட்டுமல்ல; வழிகாட்டியாகவும் விளங்கியவர் கன்பூசியஸ்.

பர்ணசாலைகள், ஆசிரமங்கள், பங்களா வாழ்க்கைப் படாடோபங்கள் தேவாலயத் திருக்கோலத் திருமடங்கள் என்பனவற்றை எல்லாம் கட்டிக்காட்டி, தனித்தனியாகக் காட்டுக்குப் போவதற்குப் பதிலாகநாட்டின் மூலை முடுக்கு களில் எல்லாம் ஒதுங்கி வாழும் சில துறவிகளைப் பற்றி ஒரு மாணவன் அவரைக் கேட்டபோது; 'நாம் பறவைகளோடும் மிருகங்களோடும் உறவு கொள்ள முடியாது; சகமனிதர் களோடும் சரிசமத்துவமாக உறவு கொள்ள முடியவில்லை என்றால், வேறு யாரோடுதான் நம்மால் உறவு கொள்ள முடியும்', என்று தூயத் துறவுக்கே துறவாடை தந்த தூய நெஞ்சினர் கன்பூசியஸ்!

எந்தெந்த நல்லொழுக்க முறையில் மனிதன் ஏற்றத் தோடு வாழமுடியும் என்பதை எண்ணியெண்ணி, அதற் கான ஒரு சமுதாயத்தையும் நெறிகளையும் உருவாக்கிட அல்லும் பகலும் அயராது உழைத்து அரும்பாடுபட்ட மனிதகுல மாமேதை கன்பூசியஸ்!

'நான் கண்ணியமும் நேர்மையும் மிகுந்த மனிதனாக வே வாழ்ந்திட முயன்றேன்; எனக்குத் தெரிந்தவற்றை மட்டும் பிறருக்கு சலிக்காமல் எடுத்துக் கூறினேன்' என்று மக்கள் இடையே மார்தட்டித் தைரியத்தோடு கூறியவர் கன்பூசியஸ்!

'மக்கள் என்றால், துன்பமும் வேதனையும்படுபவர் கள்; அல்லல் வாழ்விலே அவதிப்படுபவர்கள்; இப்படிப் பட்டவர்களோடுதான் நான் சேர்ந்து வாழ வேண்டியவ னாக உள்ளேன்! நாடெங்கும் இவ்வாறு மண்டிக்கிடக்

கும் கலவரம், ஒழுங்கின்மைகளை அகற்றவே என் வாழ் நாட்களைச் செலவழித்தேன்" என்று மக்கள் படும் துன்ப, துயர வேதனைகளுக்காக மெழுகுவத்தியைப் போல அவர் களுடன் இணைந்து வாழ்ந்து உருகி அழிந்தவர் கன்பூசியஸ் என்ற மனிதநேயாபிமான மகான்!

இயேசு பெருமான் தோன்றுவதற்கு 550 ஆண்டுகளுக்கு முன்னர், சீன நாட்டின் வடகிழக்கில் 'ஷன்துங்' என்று இப்போது வழங்கப்படும் ஒரு மலைப்பிரதேசத்தில், 'லு' என்ற மன்னனது ஆட்சியின் கீழ் அடங்கியிருந்த 'ட்சூப்வு' என்ற நகரில், சூ-லியாங்-கே என்ற ஓர் அதிகாரிக்கும் சிங்-ட்சாய் என்ற பெண்ணுக்கும் மகனாக, ஒரு பிரபு குடும்பத்திலே கி.மு. 550-ஆம் ஆண்டில் பிறந்தவர். ஞான மகான் கன்பூசியஸ். இவரை, 'குங்-பப்யூ-ட்ஸெ என்ற பெயராலும் அழைப்பது உண்டு.

கன்பூசியஸ் சாதாரண ஒரு குடும்பத்திலே பிறந்தாலும் அவரது பரம்பரை "சுங்" என்ற வம்சத்தைச் சேர்ந்தது என்பது அவரைப்பற்றிக் கூறப்படும் விவரமாகும்.

கன்பூசியஸ் தந்தை நெஞ்சுரமிக்க ஒரு வீரர்; அரசின் அதிகாரி; அவரது முதல் மனைவி பெற்றதெல்லாம் பெண் கள்; அதனால், ஆண் குழந்தை ஒன்று தேவை-வம்ச வளர்ச்சிக்காக என்று எண்ணித் தனது 70-ம் வயதில் 17-வயதுடைய ஒருபெண்ணை அவர் மணந்து கொண்டார்.

பாலைவனத்து மணல் திட்டுக்களிலே 'ஒயேசஸ்' என்ற பசுஞ்சோலை ஒன்று தென்பட்டதைப் போல, அவருக்கு ஓர் ஆண் குழந்தை அடுத்த ஆண்டே பிறந்தது!

பாலைவனமும் பசுஞ்சோலையும் சேர்ந்து பெற்றெ டுத்தக் குழந்தை; அதாவது 70-ம்—17-ம் சேர்ந்து பெற்

றெடுத்த பேரழகுக் குழந்தை; இளமையும் முதுமையும் இணைந்து ஈன்றெடுத்தக் குழந்தை என்பதனாலோ-என்னவோ-கன்பூசியஸின் இளமையிலே 'ஞானப்பூ' பூத்தது. தனது தாயின் வயதுப் பண்புக்கு ஏற்றவாறு அந்த 'ஞாலத்துக்குரிய ஞானச் சுவையைப் பிழிந்து கொடுத்தது எனலாம்.

இதற்குரிய காரணம், பாலைவனத்தின் வெட்பமும் பசுஞ்சோலையின் தட்பமும்-பருவ ஞான எழுச்சிகளின் உணர்ச்சிகளும்தான், கன்பியூஸ் என்ற கரு உருமூலமாக அறிவுப் புரட்சி உருவாக்கிய காலத்தின் கட்டாய அருமைச் சம்பவமாகும்.

கன்பூசியஸ் இளமையிலேயே வறுமைக் கடலிலே ஆழம் அனுபவித்தவர்; காரணம் தந்தையார் இறப்பும்; தாயார் வருவாய் போதாமையும்தான்!

நம் நாட்டுக் குழந்தைகள் சிறு பருவத்திலே கூடி மகிழ்ந்து அம்மா அப்பா பொம்மை வைத்து விளையாடும் வழக்கத்தை நாமும் பார்த்துள்ளோம். ஆனால், சிறுவன் கன்பூசியஸ் தனது ஆறாம் வயதிலேயே மற்ற சிறுவர்களைக் கூட்டித் தெய்வங்களுக்கு பூசை செய்து ஞான விளையாட்டுக்களை ஆடுவாராம்!

கன்பூசியஸ் இளமையிலேயே காதலாட்டம் ஆடியவர்-கல்வித் துறையில்! பதினைந்தாவது வயதில் எப்படியாவது தான் ஞானியாகி விட வேண்டும் என்று முடிவெடுத்து, அதற்கான பழங்கால நூல்களையும், பண்பாடுகளையும், மற்ற வரலாறுகளையும், வானவியல் கலைகள் சம்பந்தப் பட்ட எல்லாவற்றையும் படித்து முதிர்ந்த ஞானம் பெற்றவரானார்!

அவரே ஓரிடத்தில் இதைக் கூறும்போது, என்னுடைய இளம் வயதில் நான் மிகவும் தாழ்வான நிலையில் அடங்கி

இருந்தேன். அதனால்தான் எதையும் சமாளித்துப் பல் திறப்பட்ட விஷயங்களிலும் என்னால் திறமைபெற முடிந்தது, என்று கன்பூசியசே கூறுகிறார் என்றால், நாம் எப்படி இருந்தாக வேண்டும் என்பதற்கோர் எச்சரிக்கை அல்லவா இது?

கன்பூசியசின் பல்துறை கல்வித் திறமை அவரைத் தனது பதினேழாவது வயதிலேயே குருகுல ஆசானாக மாற்றி விட்டது. மாற்றிற்று என்றால் அந்நகரத்துச் சான்றோர்கள் எல்லாம், மரணத் தருவாயில் உள்ள முதியோர்கள் எல்லாம், அவரவர் வாரிசுகளை, 'கன்பூசியசிடம் படிக்கப் போங்கள்' என்று வலிந்து-வற்புறுத்தி அவரது குருகுலத்திற்கு அனுப்பி வைத்தார்கள் என்றால். எப்படி இருந்திருக்கும் கன்பூசியசின் போதனாமுறை அறிவுத் திறம்? சற்றே எண்ணிப் பார்ப்பவர்களுக்குத் தான் இந்த 17 வயதின் ஞானப்பழ அருமையைச் சுவைக்க முடியும்.

பத்தொன்பதாம் வயதில் அவருக்குத் திருமணமானது; ஒரே மகன்; இரு பெண்கள்; இதனால் குடும்ப பந்தம்; இருப்பினும் பழுத்த அறிவாளியாக மட்டுமல்லாமல் சிறந்த ஆட்சியாளனாகவும் மாறவேண்டும் என்ற ஆசையும் அவருக்கு இருந்தது!

கலைக்கழகம் என்ற ஒரு கல்விக் கோட்டத்தைத் தனது 22-ம் வயதில் துவக்கினார்! மனிதனின் மனப் பண்பு எப்படி அமைய வேண்டும்; எப்படி அவனுக்குப் பழக்க வழக்கங்களை உருவாக்கிட வேண்டும்; வாழ்க்கை முறை, ஆட்சி முறை முதலான வகைகளை எல்லாம் துறைதோறும் விளக்கிக்கூறும் கலைக்கழகமாக அவர் குருகுலம் இருந்ததால், கன்பூசியஸ் கல்வி ஞானத்தைத் தேடி-நாடி சீன நாட்டு மாணவர்கள் திரண்டு வந்து சேர்ந்தார்கள்; பயன் பெற்றார்கள்!

அந்தக் கலைக்கழகத்தை அவர் துவக்கும்போது கூறு கையில்: ஒரு விஷயத்தின் ஒரு மூலையை நான் கற்பித்தால், மற்ற மூன்று மூலைகளையும் தாமாகவே புரிந்து கொள்ளாத மாணவர்களுக்கு நான் தொடர்ந்து கல்வி கற்பிக்க மாட்டேன், இடம் தரமாட்டேன் என்று கறாராகவே கல்வி மீது அக்கறை காட்டிப் போதித்தார்.

தனது தாயார் இதற்கிடையில் இறந்தபோது, அவர் தாயாருக்காகத் துக்கம் காத்த தனது இரண்டரை ஆண்டு காலத்தில், அறம், இசை அரசியல், தத்துவம் முதலிய வகைகளை எல்லாம் ஆராய்ந்து பண்பட்டார்! அப்போதும், அவரிடம் பலர் நாடிவந்து தமது ஐயங்களைக் கேட்டுப் புரிந்து கொண்டார்கள்.

இருபத்தேழாம் வயதில் கன்பூசியஸ், தனது நாட்டின் பழமையான நீதிகளை ஆராய்ந்தார்! அதுதான் அப்போதைய ஞானமாக இருந்ததால், அக்கால ஞானியான லேஓ-ட்ஸே என்பவரை அவரே சென்று நேரிடையாகப் பார்த்து, தங்களது தத்துவங்களின் ஆய்வுகள், முரண்பாடுகள், வேறுபாடுகள் ஆகியன அனைத்தையும் அவர்கள் மனம் திறந்து வாதம் செய்தார்கள். அதனால், இருவருக்குமே ஏதாவது பயனுண்டா என்றால்-ஒன்றுமில்லை.

ஆனால், கன்பூசியஸ், லேஓ-ட்ஸே என்ற அந்தத் தத்துவ ஞானியிடம் விடைபெற்றுப் புறப்பட்டபோது, அந்த தத்துவ ஞானி கன்பூசியசிடம் என்ன கூறி வழியனுப்பி வைத்தார் தெரியுமா? இதோ அது:

"பெரும் பணக்காரர்களும், பிரபல ஊர் முக்கியஸ்தர்களும் கூடிச் சந்தித்து உரையாடி விடைபெற்றுப் போகும் நேரத்தில் விலை உயர்ந்தப் பரிசுகளை ஒருவருக்கு ஒருவர் வழங்கிக் கொள்வது வழக்கம்.

நற்குணமிக்க நல்லவர்கள் கூடிப் பிரியும்போது, அறிவு பூர்வமான ஞானம் செறிந்த நல்லவாக்குகளையே பரிசுகளாக ஒருவருக்கு ஒருவர் வழங்குவதும் உண்டு.

நல்ல மனிதனாக நாட்டவரால் எண்ணப்படும் நான், ஒரு சீமான் அல்லன்; செல்வமுடையவனும் அல்லன்; நாம் இருவரும் கூடிப் பிரியும் இந்த வேளையில் சில வார்த்தை களைத்தான் என்னால் உமக்குக் கூற முடியும்.

எதையும் சாதுர்யத்துடன் கூர்ந்து நோக்குபவர்களுக்கும், திறமையுடையவர்களுக்கும், அறிவு நயம் உடையவர்களுக்கும், மரணம் வெகு அருகாமையில் உள்ளது எனலாம், ஏனென்றால், இவர்கள் பிறமனிதர்களின் குற்றங்குறை களைப் பிறரிடம் அடிக்கடி எடுத்துக் கூறியவாறு இருப்பர்.

எதையும் கற்றுத் தெளிந்த வித்தகர்கள், மக்களிடம் பார்க்கக் கூடிய குற்றம் குறைகளை எடுத்து விவரிப்பதால் இவர்கள் உயிரும் எந்த நேரமும் ஆபத்தினால் சூழப்பட்டு பிரிந்து விடும். அதனால், நீயும் உம்மை மன்னரவையின் அமைச்சராக எண்ணிக் கொள்ளக் கூடாது" என்று கன்பூசியசிடம் கூறினார்.

கி மு. 522-ம் ஆண்டின் போது, கல்வியிலே கன்பூசியஸ் கடலாகக் காட்சி தருகிறார்; பல்கலை வித்தகராகவும் விளங்குகிறார் என்ற கல்விப் புகழ் அவரது ஊர் எல்லைகள் கடந்தும் அவருக்குப் பரவ ஆரம்பித்தது. அதனால், மாண வர்கள் எங்கிருந்தும் திரண்டு வந்து அவரின் மாணவர்கள் ஆனார்கள்.

517-ஆம் ஆண்டில் அதாவது, கன்பூசியசுக்கு 35வது வயதான போது, அவரது சொந்த ஊரில் சேவல் சண்டை வழக்கம் போல நடந்தது. இந்த சண்டையால் ஊரெங்கும் கலவரமும், பூசலும், கோஷ்டி மோதல்களும் நடந்தன.

அதன் விளைவாக கன்பூசியசின் 'லூ' அரசைச் சேர்ந்த 'சௌ' சீமானுக்கும், 'சீ' நாட்டின் 'பிங்' சீமானுக் கும் மனக்கசப்பு உருவாகி அது போராட்டமாக மாறியது. இந்தப் போரில், 'லூ' நகரத்து 'சௌ' சீமான் தோல்வி

ண்டான். அதனால் 'சீ' அரசில் சரணடைந்தான். 'லூ' அரசில் கலகமும்-குழப்பமும் பலமாக உருவானது.

இந்தச் சூழ்நிலையின் விளைவாக, கன்பூசியஸ் 'சீ' அரசுக்கு ஓடி செனகோ என்ற சீமானிடம் செயலாளராகப் பதவி வகித்து வாழ்ந்து வந்தார். இந்தப் பதவிக் காலத்தில்தான் அவர் நடனம், சங்கீதம் முதலிய கலைகளை ஆர்வமுடன் கற்றார். அதே நேரத்தில் 'சிங்' சீமானின் சிநேகமும் அவருக்குக் கிடைத்தது. இருவரும் அரசியல் முதலான பல விஷயங்களைப் பற்றித் தங்களுக்குள் அறிவு வாதம் செய்து கொண்டார்கள்.

கன்பூசியஸ் வாதத்தின்போது எதிர்பாராமல் வந்து வீழ்ந்த அரசியல் கருத்து வீச்சுக்கள் சிங் சீமானின் மனதை முழுமையாக சரித்து விட்டன. நிஷி என்ற பகுதியைச் சேர்ந்த எண்ணற்ற நிலங்களை கன்பூசியசிற்கு அன்பளிப்பாகக் கொடுக்க அவர் முன்வந்தபோது, 'யீங்' என்ற அவருடைய அமைச்சன் குறுக்கிட்டான்.

கன்பூசியசின் அரசியல் வாதங்களைக் கொண்டு ஓர் அரசு வாழமுடியாது. அதை ஏற்றால், மக்களுக்கும் அரசுக்கும் மோதல், கலகம், குழப்பம் மூண்டு அழிவுதான் சூழும். அதனால், அவர் கூறுவதையெல்லாம் நம்பி ஆட்சி செய்யமுடியாது, என்று கோள்மூட்டி, அவரைப் பதவியை விட்டு நீக்கித் துரத்திவிட்டான்!

என்ன செய்வார் கன்பூசியஸ்? தமது குருகுல மாணவர்கள் பின் தொடர, ஒவ்வொரு சீன நாட்டு அரசவைப் படிகட்டுகளில் ஏறி ஏறி இறங்கினார்! என்ன லாபம்?

அப்போதைய அரசுகளின் புரட்சிகளுக்கு இடையே நாடோடி போல இவ்வாறு சென்று கொண்டிருந்த கன்பூசியசும் அவரது மாணவர்களும், ஒரு மலையோரப் பாதையிலே இருந்து அலையலையாக ஓடிவரும் அழுகை ஓசையைக் கேட்டு, யாரோ ஒரு பெண், இந்த நேரத்தில் தனியாக, பயம் சூழ்ந்த மலைப்பாறை இடுக்கில் புலம்பு

கின்றாளே என்று கண்டு, கன்பூசியஸ் தனது மாணவன் ஒருவனை அவனிடம் அனுப்பி விசாரிக்கச் சொன்னார்.

அந்த மாணவனிடம் அழுது கொண்டே அந்தப் பெண் கூறும்போது, என்னுடைய தந்தை புலியினால் கொல்லப் பட்டார்; அதே புலி என் கணவனையும் சாகடித்தது; அதே மரணம் எனது மகனுக்கும் இப்போது ஏற்பட்டு விட்டதே' என்று மீண்டும் புலம்பிக்கொண்டே இருந்தாள்.

உடனே அந்தச் சீடன்' அந்த பெண்ணின் அழுகையை நிறுத்தி, 'இந்தக் கொடுமைகளுக்குப் பிறகும் கூட நீ எப்படி உயிருடன் வாழ்கிறாய்?' என்று அந்த மாணவன் புலம்பியதைக் கேட்டதற்கு, அதற்கவள். "நான் வாழும் அரசு கொடுமையானது அல்ல" என்றாளாம்.

இந்த விவரத்தை மாணவன் கன்பூசியசிடம் கூறிய தும், அதற்கு அவர், கொடுமை நிறைந்த அரசானது கொடும் புலியைவிடப் பயங்கரமானது, என்று குறிப்பிட்டு மேலால் நடந்தபடியே சென்றார்.

'லூ' அரசின் 'டிங்' சீமான் ஆட்சியில், தனது ஐம்பதாவது வயதில், குங்ஷான் புஃயூ என்பவர் ஹூவான் சீமானை எதிர்த்துப், 'பீ' பட்டினத்தில் ஒரு கலகத்தை ஆரம்பித்தார்.

அதைக் கண்ட ஹூவான் சீமான், தனக்கு யோசனை கூறவருமாறு கன்பூசியஸை அழைத்தான். புறப்பட்ட அவர் தனது மாணவர் ஒருவர் ஏதோ கூறியதைக் கேட்டு பயணத்தை நிறுத்திவிட்டார்.

அதற்குப் பிறகு, கன்பூசியஸ் 'ட்சி' அரசுக்குச் சென்று சேவை ஆற்றிய போது, அந்த சீமான் கன்பூசியசின் தொண்டுக்கு ஏற்ற உபகாரச் சம்பளம் கொடுத்தான். அதை அவர் பெறவில்லை.

'ஒருவன் திறமையைச் சரிவரப் பயன்படுத்திக் கொள்ளத் தெரியாதவனிடம் இருப்பதால், யாருக்கும்-எந்தவித

யாள பகுனுர்-டனேனும் ஏற்காது’ என்றுணர்ந்த அவர், அந்த இடத்தை விட்டுத் தனது மாணவர்களுடன் உடனடியாகப் புறப்பட்டார்.

இதுபோன்ற அறிவுரைகளை சமயம் நேரும் போதெல்லாம் கன்பூசியஸ் அடிக்கடி கூறி மாணவர்களுக்கு விழிப்புணர்வை உருவாக்கி வந்தார். இந்த நேரத்தில், அவரது 51-வது வயதில், அவருக்கு ‘சுங்டு’ நகரின் தலைமை நீதிபதியாகப் பணியாற்றும் பதவியைப் பெற்றார்.

இந்தப் பதவியில், அவரது திறமையை நன்கு வெளிப்படுத்த இது ஓர் அரிய வாய்ப்பாக அமைந்தது. கன்பூசியஸ் திறமையான பணியால் நாளுக்கு நாள் பயனும், பலனும் கிடைத்து வந்தது.

அதற்குப் பிறகு அவர், பொது நிறுவனங்களின் கண்காணிப்பாளருக்கு உதவியாளரானார். பிறகு, காவல்துறை அமைச்சரானார். எந்தப் பணியை அவர் ஏற்றாலும் அந்தப் பணியிலே ஒரு வியப்பை உருவாக்கினார் நாட்டிற்குள் அமைதியை உருவாக்கினார்.

அமைதியின்மையை விளைவிப்பவர்களுக்குத் தக்க தண்டனைகளைக் கடுமையாக வழங்கினார். நீதித்துறைப் பணிகளிலும் தனது கடுமையைக் காட்டினார். குறிப்பாகக் கூறுவதானால், கன்பூசியஸ் காவல் துறையிலும், நீதித் துறையிலும் பணியாற்றியக் காலத்தில் திருடர்களோ, அல்லது அவர்களது பயமோ நாட்டில் ஏற்பட்டதில்லை.

‘டிங்’ சீமானின் ஆட்சியின் பதினான்காவது ஆண்டில், கி.மு. 496-ம் ஆண்டின் போது கன்பூசியசுக்கு வயது அறுபது. நீதித்துறையில் அவர் ஒரு முக்கிய மந்திரியாகப் பதவியேற்றார். அதனால், மகிழ்ச்சி அடைந்த கன்பூசியசிடம் ஒரு மாணவர் கேள்வி ஒன்று கேட்டபோது:

‘குருவே! நேர்மையான மனிதன் தன்னுடைய வாழ்க்கைப் போக்கில் வரும் இன்ப துன்பத்தை சமாதான மன நிறைவுடன் தானே வரவேற்க வேண்டும்’ என்றார்,

அதற்கு கன்பூசியஸ், "ஆமாம், அவ்வாறுதான் என்றாலும், சாதாரண மனிதர்களைவிட, உயர்ந்த ஒரு பதவியை ஏற்க எந்த மனிதனும் விரும்பத்தான் செய்வான்" என்றார்.

இப்பதவியை அவர் ஏற்ற பிறகு, கன்பூசியஸ் அரசியலில் நல்ல பல மாறுதல்களையும் காரியங்களையும் தோற்றுவித்து மிகத் திறமையுடன் செயல்பட்டதை மக்கள் விரும்பி வரவேற்றுப் பாராட்டி மகிழ்ந்தார்கள்.

சீரும் சிறப்புமாக 'லூ' அரசு ஆளப்பட்டு வருவதைக் கண்ட 'ட்ரீ' அரசின் சீமானுக்குப் பொறாமை ஏற்பட்டது. 'லூ' அரசின் மக்கள் வாழ்வைக் கண்டு, தனது அரசின் மக்களும், ஊழியர்களும் 'லூ' அரசு வாழ்க்கை வசதிகளைப் போல எமக்கும் வேண்டும் என்று விரும்பிக் கேட்பார்களோ என்று கூட 'ட்ரீ' அரசின் சீமான் அஞ்சினான்.

அதனால், அந்த மன்னனைச் சார்ந்தவர்கள் சிலர் கன்பூசியஸை அந்த நாட்டின் அரசியலில் இருந்து வெளியேற்றிட சில நயவஞ்சகமானத் திட்டங்களைத் தீட்டினர். முதலமைச்சருக்குக் காணிக்கை என்ற பெயரில், லஞ்சமாகச் சில நிலங்களையும்-பணத்தையும் ஓர் அமைச்சர், சில முக்கியஸ்தர்கள் மூலமாக அனுப்பி வைத்தனர்.

கன்பூசியஸின் அரசியல் நேர்மையைத் திசை திருப்பிட அவரை அரசியலிலே இருந்து கவிழ்க்கும் நோக்குடன் செய்த சூழ்ச்சிகள்; அவரிடம் வெற்றி பெறாததால், 'ட்சி' அரசினர் அழகிகளை அனுப்பி அவரை வீழ்த்த முயற்சித்தார்கள்,

'ட்சி' அரசன் அனுப்பிய ஆடல் பாடல் அழகிகள் எண்பது பேர்களுடன் 'லூ' அரசின் அதிகாரிகளும், மன்னனும் மயங்கிக் கிடந்தார்கள் அவர்களை அந்த சுகபோகக் களியாட்டங்களிலே இருந்து மீட்டிட கன்பூசியஸ் செய்த முயற்சிகள் எல்லாம் பாழாயின.

கன்பூசியஸ் தனது சீடர்களிடம், பெண்ணின நாவைக் கண்டு பயப்படு; அது உன்னைத் தீண்டிடும் பாம்பின் விஷம்'' என்று கூறிவிட்டு, தனது மாணவர்களுடன் அந்த நட்டை விட்டே வெளியேறிச் சென்றுவிட்டார்.

ஆனால், அவர் அந்த நாட்டை விட்டு வெளியேறி விட்டதற்கு வரலாறு வேறு ஒரு சம்பவத்தைக் கூறுகின் றது. அதாவது, கன்பூசியஸின் நேர்மையான ஆட்சி மக்கள் இடையே எதிர்ப்புகளை ஏற்படுத்தியதாகவும், அவர் நாட் டில் சிதறிக்கிடக்கும் எல்லா சக்திகளையும் ஒன்று திரட்டி ஒரே தலைமையின் கீழ் குவித்து நாட்டின் சக்தியை ஒரு முகப்படுத்தி, ஒரே ஆட்சி முறையை உருவாக்க வேண்டும் என்று திட்டம் போட்டார் என்றும், அதனால் சிறிய சிறிய குறுநில அரசர்களும், பதவியாசைப் பிடித்த இளைய தலைமுறையினரும், அவரை நாட்டைவிட்டே விரட்டி யடித்து விட்டார்கள் என்றும் காரணம் கூறுகிறது வரலாறு,

எது உண்மையோ; ஆனால் ஒன்று மட்டும் உண்மை என்று புரிகிறது. கன்பூசியஸ் தனது நாட்டைச் சொந்த ஒரு அரசாங்கத்தின் கீழ், அதிக செல்வாக்குடன் வெற்றி கரமாக, தனது அரசியல் பணிகளையும் பரிசோதனைகளை யும் நடத்தி வந்தது பலருக்குப் பிடிக்கவில்லை; அதனால் அவரை வெளியேற்றச் சதி செய்து துரத்தி விட்டார்கள்.

ஆனால், இந்த நேரம் கன்பூசியஸ் என்ற ஞான மகானுக்கு ஒரு சோதனைக் காலமாக அமைந்து விட்டது. தனது நடுத்தர வயதையும் தாண்டி, வயோதிகத்தின் வாசலிலே அவர் நுழைந்து விட்டார்; தனக்கு என்ற ஓர் ஆதரவை வழங்கிடும் நாடு இல்லை; தங்கவோ ஒரு வீடு இல்லை; உற்றார் உறவினர் யாருமில்லை; தனது மாணவர் கள் உண்டு; தன்னிடமுள்ள ஞானச்செறிவு உண்டு என்ற நிலையிலே அவர் நாடோடியாகவே அலைந்து கொண்டு இருந்தார்.

தனது மாணவர்கள் மனதிலே அவர் கருத்து விதைகளை விதைத்தார். அந்த வித்துக்கள் இந்த நாட்டுக்குரிய எதிர்கால அறுவடையினையாவது வழங்காதா என்ற ஏக்கத்துடன், ஒருவித மனத் திருப்தியுடன் ஊர் ஊராக அவர் அலைந்தார். இதுதான் கன்பூசியஸ் மகானின் அன்றைய வாழ்க்கை அவலம்.

வெறும் ஞானம் போதிக்கும் ஜைன ஞானி மகாவீரரைப் போலவோ. அவர் வாழ்ந்த அதே நூற்றாண்டில் இந்தியாவில் வாழ்ந்த போதி மாதவன் புத்தரைப் போலவோ, அவருடைய நாட்டிலேயே அவர் காலத்தில் இருந்த ஞானி 'ஒட்சே'வைப் போலவோ கன்பூசியஸ் வாழ்ந்தவர் அல்லர்!

கன்பூசியஸ் ஒரு யதார்த்தவாதி; தத்துவ ஞானி மட்டுமல்ல அவர்; எதையும் எண்ணியபடி செய்துகாட்ட வேண்டும் என்ற ஒரு செயல் ஞானி; ஒரு நாடு நல்ல நிலையில் வளமாக வாழக்கூடிய அடிப்படை அம்சங்களான அரசு நிர்வாகம், சமூகச் சீரமைப்பு, அரசியல் சட்டம், ராணுவ தந்திரம், குடும்ப வாழ்வு, பொது ஒழுக்கம், உலக சமுதாயம், தனிமனித ஒழுக்கங்கள் அனைத்தையும் உருவாக்க வல்ல ஒரு பேரறிவாளர்; அவற்றைப் பற்றி யாரிடமும் விவாதிக்கக் கூடிய அறிவு பலம் வாய்ந்தவர்; செயலிலே செய்து காட்டும் எல்லா வகைத் திறமைகளும் உடையவர்! அவர் கதி-அப்போது அப்படி! பாவம்; பாவம்!

அத்தகைய ஓர் அற்புத மகானை யார் அரசியல் குருவாக ஏற்கவல்லார்? இந்த நிலையில் எல்லாம் இழந்த கன்பூசியஸ், தனது மாணவர்களோடு 'வெல்' என்ற நாட்டை அடைந்தார்! அங்கிருந்தும் பொறாமைக்காரர்களால் விரட்டப்பட்டார்!

விரட்டப்பட்ட அவர், ஒரு மலைப்பாதை வழியாக மாணவர்களுடன் கால்கடுக்க நடந்து கொண்டிருந்த போது, தங்களுக்குக் கேடுகள் பல செய்த 'யாங்யூ' என்று

என்று அவரைத் தவறாக ஆள் மாறாட்டம் செய்து கொண்ட மலைப்பகுதி மக்கள், கன்பூசியஸைப் பிடித்துக் கொண்டு போய் சிறையில் அடைத்தார்கள். ஐந்து நாட்கள் கழிந்தபின், அவர் ஒரு நாடோடி ஞானி என்று தெரிந்த பின்பு அவர்கள் அவரை விடுதலை செய்தார்கள்.

விடுதலையான கன்பூசியஸ் 'பூ' என்ற அரசுக்குச் சென்று சில நாட்கள் தங்கி விட்டு மீண்டும் 'வெய்' என்ற நாட்டிற்கே வந்து தங்கியிருந்தார்! ஒரு நாள் 'வெய்' சீமான் தனது அரசியுடன் பல்லக்கில் பவனி வந்து கொண்டிருந்தார்.

அந்நகரத்து மக்கள் பெருந்திரளாக ராணியின் கவர்ச்சியை அழகை, பகட்டான பல்லக்குப் பவனியை பார்த்துக் கொண்டிருக்கையில், ஒரு மாணவன் குருவைப் பார்த்துக் கேட்டக் கேள்விக்கு அவர் பதில் . கூறியபோது; "மக்கள் எழிலரசிகளின் அழகு முகப் பொலிவைக் கண்டு அகமகிழ்ச்சிக் கொள்வதுபோல, எல்லாம் கற்றுத் தெளிந்த ஞானியின் முகத்தைக் கண்டு கவர்ச்சி அடைய மாட்டார்கள்" என்று குறிப்பிட்டார்.

பிறகு, 'ட்சாங்' அரசில் அவர் ஒரு மரத்தடியில் தங்கி தமது மாணவர்களுக்கு அறிவு போதனை செய்தார். அதை அறிந்த, அந்த நாட்டின் தளபதி ஒருவன் மரத்தடிகளை எல்லாம் வெட்டித் தள்ளிக் கொண்டே வந்தான். வெட்டிய மரம் தனது தலைமேலே விழுவதற்குள் கன்பூசியஸ் தப்பித்துக் கிளம்பி விட்டார்.

தப்பித்துவிட்ட கன்பூசியஸ் தனது மாணவர்களிடம் பேசும்போது, "நான் மேலுலகம் பணித்ததைச் செய்து வருபவன்; இந்த அற்ப சேனைத் தலைவனால் எனது லட்சியப் பணியைத் தடுத்துவிட முடியாது" என்று கூறி விட்டுத் தம் மாணவர்களுடன் 'செங்' என்ற அரசுக்குப் புறப்பட்டுவிட்டார்.

'செங்' அரசுக்குச் சென்றபோது, தனது மாணவர்களை விட்டுப் பிரிந்து அவர் மட்டும் தனியாக அந்த அரசு கோட்டை வாயிலிலே சென்று நின்றார். அதைப்பார்த்த காவலன் உடனே 'ட்சேமுங்' என்பவரிடம் ஓடி, 'நம் நகரிக் கோட்டை வாசலில் கம்பீரமானத் தோற்றத்துடன் சிலைபோல ஒருவர் 'திக்கின்றி சுற்றியலையும் நாயைப் போல' நிற்கின்றார் என்றான்.

அந்த வார்த்தைகளைக் கேட்ட கன்பூசியஸ் புன்னகை பூத்த முகத்தோடு "ஆமாம்! எனது தோற்றத்தைப் பற்றிக் கூறியவை முக்கியமல்ல; திக்கில்லாமல் சுற்றியலையும் நாய்க்கு என்னை ஒப்பிட்டது மிகப் பொருத்த மானதே" என்றார்

அந்த இடத்தை விட்டு அகன்ற அவர், 'யெங்' அரசிற்குச் சென்று மூன்றாண்டுகள் தங்கினார். பிறகு, 'பூ' அரசைக் கடந்து மீண்டும் மாணவர்களுடன் சென்று கொண்டிருந்தபோது, அப்பகுதி மக்களில் சிலர் அவரை வழிமறித்துக் கொண்டார்கள். அவர்களை எல்லாம் அவரது மாணவர்கள் அப்புறப்படுத்தினார்கள். வழிமறித்த மக்கள் கன்பூசியசைப் பார்த்து, 'வெய்' அரசுக்குச் செல்வதில்லை என்று வாக்குறுதி கொடுக்குமாறு கேட்டார்கள்; சரி, என்று ஒப்புக்கொண்ட அவர், மீண்டும் அந்த அரசுக்கே தான் கொடுத்த வாக்குறுதியை மீறிச்சென்றார்

கொடுத்த வாக்குறுதியை நீங்களே இப்படி மீறலாமா? என்று அவரை மாணவர்கள் கேட்டபோது, "கட்டாயப் படுத்தி வாங்கப்பட்ட வாக்குறுதியைக் கைதவற விடுவதில் அதர்மம் ஒன்றுமில்லை. அதுபோன்ற சூழ்நிலைகளில் கொடுக்கப்பட்ட வாக்குறுதிகள் கடவுளின் காதுகளுக்குப் போய் சேர்வதில்லை".

அப்போது, 'பிஷ்சி' என்பவர் 'சுங்மெங்' பட்டினத்தின் நீதிபதியாக இருந்தார். தனது நகரை விரோதிகள்

தாக்குவதைத் தடுக்க, அதற்குரிய யோசனைகளைக் கேட்பதற்காகக் கன்பூசியஸைத் தன் நகருக்கு வருமாறு கேட்டுக் கொண்டான்.

அந்த நேரத்தில் 'ட்பூஹுவி' என்ற அவரது மாணவன், 'ஆசானே, நெறி தவறிய வாழ்க்கை நடத்தக்கூடிய ஒருவனுக்கு நீங்கள் உதவி புரிவதா?' என்றான். அதற்கு அவர், 'உண்மையாக, கடினமான பொருளானது அரைக்கப்படுவதற்கு அஞ்சுவதில்லை. நல்ல தூய்மையான வெண்ணிறம் உள்ள பொருளானது வெளிப்புறக் கலவைகளால் தன் வெண்மை நிறத்தை இழக்காது. நான் எத்தனை நாட்களுக்குப் புடலங்காயைப் போல துவண்டுத் தொங்கிக் கொண்டிருப்பேன்?'' என்றார்.

ஹுவான் சி என்ற சீமான் தனது மரணப்படுக்கையில் இருக்கும்போது, ஒரு காலத்தில் 'லூ' அரசு சீரும் சிறப்புமாக இருந்தது. நான் ஒரு சமயம் கன்பூசியஸ் மனதைப் புண்படுத்திவிட்டேன். அதனால் அந்த நாட்டின் முன்னேற்றம் தடைப்பட்டது. என்று கூறிய அந்த சீமான், தனது அருகே இருந்த 'காங்சீ' சீமானை நோக்கி, நான் இறந்த பிறகு நீ தலைமை அமைச்சன் ஆவாய்; அப்போது ஞானி கன்பூசியஸை இந்த நாட்டின் உயர்ந்த நிர்வாகத்தில் அமர்த்து' என்று உருக்கமாகக் கூறினார்.

அதுபோலவே கன்பூசியஸை சம்பந்தப்பட்ட சீமான் பதவியில் அமர்த்தியபோது, அவனது சகோதரன் ஒருவன் இடைமறித்து, 'கன்பூசியஸை உயர்பதவியில் உட்கார வைக்காமல்! அவருக்குப் பதிலாக அவரது மாணவனான ஜான் ச்யூவை அரசியலுக்கு அழைக்கச் சென்றபோது ஒரு மாணவன் ஜான் ச்யூவைப் பார்த்து ''உண்மையான அதிகாரத்தை உன்னிடம் வழங்கிட 'லூ' அழைக்கிறது' என்றான்.

மற்றொரு சீடன் ஜான் ச்யூவை நோக்கி, 'நீ பதவியில் அமர்ந்ததும் நமது குரு கன்பூசியஸை உன்னிடம் அழைத்

துக் கொள்" என்று கேட்டுக் கொண்டான். அடுத்த ஆண்டு கன்பூசியஸ் 'யெய்' அரசுக்குச் சென்றபோது, நல்ல முறையில் நடந்து வரும் ஓர் அரசின் முக்கிய அம்சம் என்ன? என்று கேட்டான்.

'தன்னுடைய ஆட்சியில் இருக்கும் மக்களின் நன்னம்பிக்கையைப் பெறுவது; வேற்று நாட்டு மக்களின் நேச உறவைப் பெறுவது; இவை நல்ல ஆட்சியின் அம்சங்களாகும்' என்று கன்பூசியஸ் பதில் கூறினார்.

'உங்களுடைய கன்பூசியஸ் எப்படிப்பட்டவர்?' என்று அவரது மாணவனிடம் 'யெய்' சீமான் கேட்டான். சீடன் அதற்குப் பதில் கூறாமல் அந்தக் கேள்வியை அப்படியே குருவிடம் வந்து கூறினான். அப்போது அவர் பதில் கூறும் போது, 'உண்மையைக் கண்டறிய உழைப்பவன், தனக்குத் தெரிந்தவற்றைப் பிறருக்கு எடுத்துரைப்பவன்; எந்த ஒரு விஷயத்திலும் ஆராய்ச்சியில் ஈடுபட்டிருக்கும் போது தனது உணவையும் மறந்திருப்பவன்; முதுமைப்பருவம் வந்தாலும் அதைக் கண்டு கொள்ளாமல் இருப்பவன்; இவற்றிலே ஈடுபடும்போது சிறிதும் சளைக்காமல் பொறுப்புடன் இருப்பவனும் தான்-கன்பூசியஸ் என்று, அந்தச் சீமானிடம் போய்க்கூறு என்று அவனை அவர் அனுப்பிவைத்தார்!

இதற்குப் பிறகும் பல இடங்களில் கன்பூசியஸ் சுற்றி அலைந்தார். அப்போது, 'பூ' அரசுக்கும் 'சென்' அரசுக்கும் இடையே கடும்போர் மூண்டது. சென் அரசுக்கு உதவி செய்திட 'சூ' அரசு முன்வந்தது. அரசின் சேனை 'செங்பூ' என்ற இடத்தில் முகாமிட்டது. இந்த இரு அரசுகளின் எல்லைகளுக்கிடையில் அப்போது கன்பூசியஸ் பயணம் வந்து கொண்டிருந்தார் 'சூ' அரசினர் அவரை வரவேற்றிட ஏற்பாடுகளைச் செய்திருந்தனர்

சென் அரசு மந்திரி, ட்சாய் அரசின் மந்திரியோடு சேர்ந்து, 'சூ' அரசுக்குக் கன்பூசியஸ் போவதைத் தடுக்கப்

படைகளை அனுப்பி அவரைச் சூழ்ந்து கொண்டார்கள்; அப்பகுதி வறண்ட பகுதி; அதனால் படைகளில் பலர் பட்டினி கிடந்தார்கள். கன்பூசியஸ் மாணவர்களில் சிலரும் நோய்வாய்ப்பட்டார்கள்.

இக்கட்டான அந்த நேரத்தில், கன்பூசியஸ் அமைதியோடு சங்கீதம் பாடிக்கொண்டிருந்தார். இதைப் பார்த்த நேரத்தில், நாம் சிக்கிக்கொண்டது இயல்புதானா? என்றான்

உடனே கன்பிசியஸ், "இயல்புதான்! ஆனால், அந்தச் சமயத்தில்தான் அவன் மிகுந்த பொறுமையோடும், அமைதியான முறையிலும் நடந்து கொள்ள வேண்டும். அற்பனைப்போல முட்டாளாகக்கூடாது; அற்பமான செயல்களைச் செய்யக்கூடாது" என்றார். இந்த வார்த்தைகள் சில மாணவர்களின் மனதைக் கவர்ந்தன.

கூர்ந்து அதைக் கவனித்த கன்பூசியஸ், "எல்லா விஷயங்களையும் நான் எனது நினைவில் வைத்திருக்கிறேன். அந்த நினைவிற்காகவே பல விவரங்களை நான் கற்றுள்ளேன் என்றும் எண்ணுகிறாயா நீ?" என்று அவர் கேட்டதற்கு, மாணவன் 'ஆம்' என்றான்.

இதைச் சிந்தித்த கன்பூசியஸ், நமது மாணவர்கள் நம் மீது அதிருப்தி அடைந்துள்ளார்கள் என்பதைக் கண்ட அவர், அவர்களது மனத்தை ஆராய விரும்பினார். உடனே தனது மாணவன் 'ட்சூலு'வை அழைத்து, 'நாம் இந்த காட்டில் உலவிவரும் புலிகளா? காண்டா மிருகங்களா? நான்கூறும் தத்துவங்கள் பொய்களா? நாம் இந்தச் சூழ்நிலையில் ஏன் கஷ்டப்படுகிறோம்? காரணம் என்ன? என்று பொறுமையாகக் கேட்டார்.

அதற்கு அந்த மாணவன்; 'பொது மக்களின் மனதை ஈர்க்கும் வகையில் எதைக் கூறினோம்? என்ன காரியம் அதற்காகச் செய்தோம்? நமது தத்துவங்கள் மக்கள் மனதைக் கவரவில்லை; நாம் அவர்களுக்குக் காட்டும்

பாதை அவர்களால் பின்பற்றமுடியாதவை; பொருந்த மற்றவை என்று நினைக்கிறேன்" என்றான்.

'உண்மைதான் உண்மையான தத்துவங்கள் மக்கள் மனதைக் கவர்வது கஷ்டம்தான்' என்றார் கன்பூசியஸ்! பிறகு, அடுத்த சீடனை அழைத்து, நாம் என்ன புலிகளா? காண்டாமிருகங்களா? கானகத்தில் நடமாடி நமது நாட்களை நகர்த்திட இந்தச் சூழ்நிலையில் நாம் இங்கே இருப்பதற்கு என்ன காரணம் என்று அவர் கேட்டார்.

"தங்களுடைய கருத்துக்கள் மக்கள் பின்பற்றக் கூடிய அளவுக்குச் சுலபமாக்கப்பட வேண்டும்' என்று அந்த மாணவன் பதில் கூறினான். அப்போது அவனுக்குப் பதில் கூறும்போது கன்பூசியஸ்; உழுது விதை விதைக்கும் நேரத்தில் அறுவடையின் பயன் எப்படி இருக்கும் என்று உழவனால் கூறமுடியாது.

கலைநுட்பம் செறிந்த ஒரு பொருளை உருவாக்கும் கலைஞன், அந்தப் பொருள் மக்களைக் கவர்ந்து விடமுடியும் என்று கணக்குப் போடுவது வெறும் கனவே.

உன்னைப் போன்றவர்கள் தன்னைப் பண்படுத்திக் கொள்வதில் தனது அக்கறையைச் செலுத்தாமல் மக்களின் மனதை எவ்வாறு கவரமுடியும்? என்ற நோக்கத்திலேயே மூழ்கிப் போய் விடுகிறார்கள்.

உன்னைப் போன்றவர்கள் தனக்குத்தானே அமைத்து கொள்ளும் முடிவு சரியானதல்ல என்று கன்பூசியஸ் சற்றுக் கடுமையாகவே பதில் கூறினார்.

மற்றொரு சீடனை அழைத்து பேசும்போது; புலிகள், காண்டா மிருகங்களைப் போல நாம் ஏன் சுற்றி அலைந்து கொண்டிருக்கிறோம்? இந்த நிலைக்குக் காரணம் யார்? என்றார்.

அதற்கு அந்த மாணவன், 'தன்னுடைய கருத்துக்களும்-தத்துவங்களும் மிக உயர்ந்தவை. ஆனால், அதை மக்கள் எளிதில் பின்பற்றுவது கஷ்டம். அதற்காக அதை நாம் போதிப்பதிலேயே நிறுத்திவிடக்கூடாது. பிறரால் அக்கருத்துக்கள் ஏற்கப்படவில்லை என்ற கவலை உங்களுக்கு ஏன்?

மற்றவர்களால் உங்களுடைய கருத்துக்கள் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்ற உண்மையே நீங்கள் நேர்மையான மனிதர் என்பதற்குச் சான்றாக இருக்கிறது.

நாம் பிறர் மனதில் உண்மையான கருத்துக்களை விதைக்கவில்லை என்றால் அது நம்முடைய தவறு. ஆனால், நாம் வித்திட்டும் அவை மக்களால் ஏற்றுக் கொள்ளப்படவில்லை என்றால் அது நமது தவறு அல்ல. அதற்குப் பொறுப்பு ஆட்சி நிர்வாகத்திலே உள்ளவர்களை சேரும்.

உங்கள் கருத்துக்களைப் பிறரால் எளிதில் புரிந்து கொள்ள முடியவில்லை என்பதே தங்களை ஞானியாக்கி விட்டது என்றான். அதைக் கேட்ட கன்பூசியஸ் சிரித்துக் கொண்டார்.

கன்பூசியஸ், சூ அரசுக்கு தனது மாணவன் ட்சே குங் என்பவனை அனுப்பினார். அரசரின் ஆட்கள் உடனே வந்து அவரையும், அவரது மாணவர்களையும் விடுவித்துக் கொண்டு போனார்கள்.

அந்த மன்னன் அவருக்கு தர இருந்த நிலங்களை அங்குள்ள அமைச்சன் தடுத்து நிறுத்தி விட்டான். பிறகு அந்த அரசன் கி.மு. 489-ம் ஆண்டு மறைந்து விட்டான்.

'வெய்' அரசுக்கு மீண்டும் கன்பூசியஸ் தனது 63-வது வயதில் வந்தார். அப்போது அவரது மாணவர்களிலே சிலர், பலவித அரசியல் பதவிகளைப் பெற்று வந்தார்கள் அந்த அரசன் கூட அவரது ஆலோசனைகளைப் பெற்று

ஆட்சிமுறையை நெறிபடுத்தலாமா என்று கூட நினைத்தான்.

'வெய் அரசில் உங்களுக்கு முக்கிய பதவி தந்தால் முதலில் என்ன செய்வீர்கள்?" என்று மாணவன் ஒருவன் கன்பூசியசைக் கேட்ட போது, "முதலில் அரசின் நிர்வாகத்திலே பயன்படுத்தப்பட்டு வரும் வார்த்தைகளை எல்லாம் திருத்தி அமைப்பேன் அவற்றை எந்த பொருளில் எப்போதெல்லாம் உபயோகிக்க வேண்டும் என்ற ஒழுங்கை நிலைநிறுத்துவேன்" என்றார்.

உடனே அந்த மாணவன், எதற்காக அதை முதல் காரியமாகச் செய்ய வேண்டும்? என்று அக்கறை ததும்பக் கேட்டான். அதற்கு அவர் என்ன பதில் கூறினார் என்பதை இன்றைய ஒவ்வோர் அரசும் சிந்திக்க வேண்டிய ஒரு முக்கியப் பிரச்சினையாகும்.

ஓர் அரசின் நிர்வாகத்தில் பயன்படுத்தக்கூடிய வார்த்தைகள் மிக முக்கியமானவை. ஒருவர் தனது கருத்தைப் பேசும்போது சரியான வார்த்தைகளால் அதை வெளிப்படுத்த முடியவில்லை.

ஓர் அதிகாரி தனது ஆணைகளைப் பிறப்பிக்கும்போது அதற்குரிய சரியான மொழிச் சொற்களால் குறிப்பிட முடியவில்லை. அந்த மாதிரியான ஒரு நிலை உருவாகும் போது, அந்த அதிகாரி விரும்பும் அளவுக்கு அந்த ஆணை பயன் தராமல் போய்விடுகின்றது.

இதுபோலவே, தொழுகை முறையிலும், சமூக உறவு முறைகளிலும் சரியான பதங்களைப் பயன்படுத்தத் தவறும் போது, அந்தத் துறைகளில் பலவிதமான பொருட் பேதங்களும் விளைகின்றன.

நாட்டின் நீதி நிர்வாகங்களிலும், பொருட் பேதங்களும், அனர்த்தங்களும், தோன்றுவதற்கு வாய்ப்புகள் உள்ளன. இத்தகைய சூழ்நிலைகள் ஓர் ஆட்சியில் ஏற்படு

யானால் மக்கள் இடையே குழப்பங்கள், சூழ்ச்சிகள், கலகங்கள், கொலை, திருட்டுப் புரட்டுக்கள் எல்லாம் உருவாகி, அந்த நாட்டின் நல்வாழ்வே நாசமாகி விடும்.

இதனால் நாட்டின் நிர்வாகத்தில் நேர்மை, நீதி நிலைக்காது; அறம் கெடும்; அதனால் நேர்மையான மனிதன் எந்த நேரத்திலும் எதற்கும்சரியான சொற்களை, பதங்களை, சொற்கோவை வார்த்தைகளைப் பயன் படுத்துவது நல்லது என்று கன்பூசியஸ் கூறிய பதிலைக் கேட்டு மாணவன் திகைத்து விட்டான்!

இப்போது மகான் கன்பூசியசுக்கு வயோதிகம் ஆட் கொண்டு விட்டது; இறுதிக் காலமும் நெருங்கி வந்து விட்டது. மனமுடைந்த ஞானப்பழமாய் தனது 68-ம் வயதிலே தனது சொந்த ஊரான 'லூ' அரசு மண்ணுக்கு வந்து சேர்ந்தார்.

ஏறக்குறைய சீன நாட்டு மண்ணின் மூலை முடுக்கு களில் எல்லாம் பதினைந்து ஆண்டுகள் நாடோடி ஞானி யாக அலைந்து திரிந்தார். இறுதிக் காலத்திலும் கூட, இவ்வளவு அறிவும், புகழும்-ஞானமும், சகலத் திறமையும், வல்லமையும் கொண்ட ஒரு பழுத்த ஞானியைப் பாராட்டிட அவரது மண்கூட அவருக்கு மதிப்பளிக்க வில்லை, பாவம்! அவருடைய யோசனைகளைக் கூட கேட்க யாருமில்லை! ஆனால், சீனத்துப் பொது மக்கள் மட்டும் அவரை வந்து பார்த்து உரையாடி, மகிழ்வித்து ஞானோபதேசம் பெற்றுப் போய்க் கொண்டிருந்தார்கள்.

கன்பூசியஸ் மீண்டும் குருகுல போதகர் ஆனார்! மாணவர்கள் எங்கெங்கோ இருந்து வந்து குவிந்தார்கள். அந்த சீடர்களின் தகுதி, தரத்துக் கேற்றவாறு அவர் அறிவாசானாக விளங்கினார்! அவர்களிடம் உரையாடியே தனது பொழுதைப் போக்கிக் கொண்டார்.

சமயக் கோட்பாடுகள், பழைய சரித்திர நூல்கள், இலக்கியங்கள், ஆசாரப் பண்பாடுகள் பற்றியெல்லாம்,

தமது மாணவர்களைத் துணையாக வைத்துக்கொண்டு ஆராய்ச்சி செய்தார்! அவர்நூற் பதிப்பிக்கும் பதிப்பாசிரியராகவும் இருந்தார்!

கி.மு. 722-ம் ஆண்டு முதல் கி.மு. 481-ம் ஆண்டு வரை நடந்த சம்பவங்களை எல்லாம் ஒன்று திரட்டினார்; வரலாற்று வடிவமாக்கினார்; அவற்றை நூல் வடிவத்தில் வெளியிட்டார்.

கன்பூசியஸ், நியாயமும் நேர்மையும் இல்லாத கருத்துக்கள், ஆணவமும் அகத்தையும் உடைய குணங்கள், குறுகிய மனப்பான்மையால் விளைந்த சம்பவங்கள், தற்புகழ்ச்சியால் மனிதநேயத்தை மாசுபடுத்திய தன்மைகள் ஆகிய நான்கு வகை பொருந்திய கருத்துக்களை எல்லாம் குப்பையென ஒதுக்கிவிட்டார். அவர் வெளியிட்ட நூலில் மேற்கண்டவைகள் எதையும் பார்க்க முடியாது.

ஆனால், மனித சமுதாயத்திற்குத் தேவையான மூன்று குணங்களுக்குரிய செயல்கட்கு மரியாதையும் மதிப்பும் தந்தார். அவை; தொழுகைக்கு முன் குளிக்கும் முறை, போர், நோய் போன்றவைகளாகும்.

கன்பூசியஸ் மன வேதனைப்பட்டு வருந்திய சம்பவங்கள்:

○ விதி, இலாபம், சுவர்க்கத்தின் ஆணை! இவற்றை பற்றி அபூர்வமாகவே பேசியவர் கன்பூசியஸ்.

○ ஒரு மனிதன் தனது மனதைப் பண்படுத்தாமல் இருப்பது.

○ சரியான முறையில் கல்வி பயின்றும், சகல விஷயங்களைப் பற்றியும் கற்றுத் தெளியாமல் இருப்பது;

○ நேர்மையான பாதை என்று தெரிந்தும், அதைப் பின்பற்றாமல் இருப்பது;

○ தன்னுடைய தவறுகளை உணர்ந்தும் அவற்றை விலக்காமல் இருப்பது;

இவை, கன்பூசியஸ் என்ற ஞானியை வருத்தப்பட வைத்த சம்பவங்கள்;

○ நம்பிக்கைக்குப் புறம்பான புராண இதிகாசங்களில் காணப்பட்ட அதி விநோதமான செயல்களைப் பற்றி எப்போதும் பேசாதவர்.

○ எதற்கும் அடங்காத அகம்பாவிகளின் அக்கிரமச் செயல்களைப் பற்றி, யாரிடமும் எப்போதும் பேச மாட்டார்.

○ மதம்பற்றி அவர் பேசிய போதும், கடவுள் சிலைகள் முன்பு அவர் பயபக்தியோடு பணிந்து நின்றபோதும், தம்மால் மதத்தைப் பற்றியோ கடவுளைப் பற்றியோ சரிவரப் புரிந்து கொள்ளமுடியவில்லை என்றே திட்டவட்டமாகக் கூறினார்.

○ அமைதியான முறையில், இதயப் பூர்வமாக கடவுளைத் தொழுவதையே அவர் விரும்பினார்.

○ பாவச் செயல்களைப் புரிந்துவிட்டு, அவற்றுக்குப் பிராயசித்தம் தேடும் வகையில் பிரார்த்தனை செய்வது அவர் மிகவும் வெறுத்த விஷயமாகும்.

○ தனது சொந்த ஊருக்கு கன்பூசியஸ் திரும்பி வந்து குருகுல-மாணவ வாழ்க்கையை நடத்திக் கொண்டிருந்த போது, அவரது மகன் 'பெயியு' மரணமடைந்தார்! அவரது தலையாய மாணவர்களுள் ஒருவரான 'யென்யு யேய்' என்பவரும் இறந்துபோனார்.

○ இந்த இரு பெரும் சாவுக் கொடுமைகளைக் கண்ட வயோதிக வளமேறிய ஞானி கன்பூசியஸ் பெருமூச்செறிந்தார்! "இறைவா என்னை அழித்து விட்டாயா? இறைவா என்னை அழித்து விட்டாயா!" என்று விம்மி விம்மி அழுதார்.

○ தனது மாணவர் உயிர் பிரிந்தபோது, 'என்னுடைய இலட்சியப் பணியை என்னிடம் இருந்து வானகம் பிரித்து விட்டது. என்று அனல்பட்ட மெழுகு போல உருகினார்.

○ உச்சிக் கொம்புடன் அமைந்த ஒரு காண்டா மிருகம் ஒன்றை அவர் பார்த்தபோது, அது கெட்ட சகுனத்தின் அறிகுறி என்று உணர்ந்தார்! அதனால், 'எல்லாம் ஒரு முடிவுக்கு வந்துவிட்டதாக எண்ணிய அவர், எனது

முடிவின் அறிகுறியே இது" என்று நம்பினார்! அப்போது 'இந்த உலகில் என்னைச் சரியாக யாரும் புரிந்து கொள்ள வில்லையே" என்று கூறி ஆற்றமுடியாத சோக வெள்ளத் திலே மிதந்து போனார்!

○ தனது கடைசி காலத்தில் 'வசந்தமும்-பின் பனி யும்" என்ற நூலை எழுதினார்! அந்த நூலிலேதான் கி.மு. 722-ம் ஆண்டில் ஆட்சி செய்த 'யின்' சீமானின் காலம் கி.மு. 481-ம் ஆண்டு வரை ஆட்சி செய்த 'யெய்' சீமானில் ஆட்சிக்காலம் வரையுள்ள பன்னிரண்டு சீமான்களின் ஆட்சி வரலாற்றுச் சம்பவங்களையும், அவர்கள் செய்த அக்கிரமச் செயல்களையும்-நன்றாக, தெளிவாக விளக்கி, அந்த மனிதத் தன்மையற்றச் செயல்களைக் கண்டித்து அத்துடன் அவர் எழுதியுள்ள கண்டனங்களையும் ஒன்று சேர்த்து நூலாக வெளியிட்டார்.

○ கன்பூசியஸ் இவ்வாறு அந்த வரலாற்று நிகழ்ச்சி களை ஏன் எழுதினார்? வருங்காலத்தில் ஆட்சிப்பொறுப்பு வகிப் வர்கள் இத்தகைய ஒரு வரலாற்று அவமானங்களை நடத்தக்கூடாது என்பதற்காகத்தான் அந்த நூலை அவ்வாறு எழுதி வெளியிட்டார்.

கன்பூசியஸ் என்ற ஞான வேளான் விவசாயத்திலே வளர்ந்த அறுவடைப் பயிர்களுள் ஒருவரான "ட்சூலு" கி.மு. 480-ம் ஆண்டு மறைந்து விட்டான்! இந்த நேரத்தில் வேளாண் பெருமகனான கன்பூசியஸ் நோய்வாய்ப் பட்டி ருந்தார்!

பழுத்தப் பழமான கன்பூசியஸ் பெருமானைப் பார்ப்ப தற்காக-அவரது அறிவு வளர்ப்புச் செல்வன் 'ட்சேகுங்", தனது பேராசானைக் காண ஓடோடி வந்தான்!

வயோதிகத்திலும் ஒரு சிறு கோபம் வந்த அந்தப்பேரறி வாளன், இவ்வளவு காலம் கடந்து என்னைப் பார்க்க இப்போது ஏன் வந்தாய்? என்று கேட்டுவிட்டு,

"மாபெரும் மலையும் தானே
பொடியாகி மறைந்து போகும்!
உறுதியான தூண்களும் ஒருநாள்
உடைந்து ஒழிந்து போகும்
செடிபோன்ற இந்த ஞானி
வாடி மறையலானேன்

என்று துன்பமும் துயரமும், சோகமும் சோர்வுமான தளர்ந்த குரலில் ஞானி கன்பூசியஸ் தத்தித் தத்திப் பாடிக் காற்றோடு காற்றாகிக் காலமானார்!

கி.மு. 479-ம் ஆண்டு, உலகத்தின் பொதுதத்துவ ஞானியான மகான் கன்பூசியஸ், தனது 73-ம் வயதில் உயிர்துறந்தார். அவரது மரணப் படுக்கை அருகே அவரது ஒரு பெயரன் மட்டுமே அமர்ந்திருந்தான். வேறு யாரும் இல்லை!

'நான் பிறந்த இந்த உலகில் எதையும் சாதிக்காமல் இந்த உலகை விட்டுப் போவது எனக்குப் பெருத்த அவமானம்! இதற்காக வருங்கால மக்கள் என்னைத் தூற்றாமல் இருக்க வேண்டுமே' என்று வருத்தம் தழுவிய ஏக்க இழுப்போடு, தனது பெயரக் குழந்தையிடம் கூறிய கடைசி வாசகம் இதுதானோ...!

எந்த அறிவுள்ள அரசனும், என்னை ஆசானாக ஏற்றுக்கொள்ள எழுந்து வரவில்லை! நான் மரணத்தை அணைத்துக் கொண்டே காலமாகிறேன் வானகமாகிறேன்.

ஞானமகான் கன்பூசியஸ் உடலம் 'லூ' பட்டினத்தின் 'சே' நதியின் கரையிலே அடக்கம் செய்யப்பட்டது. அவரது ஞானத்தால் வளம்பெற்ற "மாணவப் பயிர்கள் எல்லாம் அவருடைய கல்லறை அருகே மூன்றாண்டுகள் வரைக் கண்ணீர் சிந்தினார்கள்.

எந்த மாணவனைப் பார்த்து தனது மரண சங்கீதத்தை இசைத்தாரோ, அந்த மாணவனான, 'ட்சே குங்' மட்டும் தனது ஞானப் பெருமான் கல்லறை அருகே ஆறாண்டுக் காலம் குரு பக்தி விசுவாசப் பயிராக வளைந்து, வணங்கி, வளர்ந்து மறைந்தான்!

எனது பேனா முனையால் உலகத்தையே மாற்றி யமைப்பேன் என்று சூளுரைத்த பேனாவீரர் வால்டேர், கன்பூசியஸ் என்ற பேரறிவாளனைச் 'சீனாவின் முடி சூடா மன்னர்' என்று போற்றியுள்ளார்.

மனிதன் மகிழ்ச்சியோடும், நெறியோடும் வாழ்வது எப்படி என்பதைக் கன்பூசியஸ் என்ற ஞானியைப்போல அழகாகவும், தெளிவாகவும் மக்களுக்கு எடுத்துக் கூறியவர் வேறு எவருமில்லை என்றார்!

மனித இனத்திற்குப் பயன்படும் முறையில் அறநெறி வழிகளை விளக்கி, தனி மனிதனுக்காகவும், பொதுமனிதச் சமுதாயத்திற்காகவும் சிந்தித்து அரும்பாடுபட்டவர் இவரை விட வேறு யாருமே இல்லை என்று அறிவு முரசு கொட்டலாம் என்று கூறியவர் வால்டேர்! வாழ்க கன்பூசியஸ்! வளர்க கன்பூசியனிசம்! ★